# தக்கார் குரல்

TNBIL/25/A2396

மலர் 1 | இதழ் 2 | நவம்பர் 2025 | மாத இதழ் | விலை ரூ.25

Volume-1 | Issue 2 | November 2025 | Monthly Magazine | Price RS.25



## நாகூர் தர்காவில் ஊழலா?



## அதிமுக கோட்டையை தகர்க்கும் திமுக?






## போலீஸ் கையிலெடுத்த புதிய உத்தி!








## புதுச்சேரி கூத்து: உடைகிறது பாஜக கூட்டணி?



“தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப் படும்“

ஒருவர் நேர்மையானவரா அல்லது நெறி தவறி, நீதி தவறி நடந்தவரா என்பது அவருக்குப் பின் எஞ்சி நிற்கப்போகும் புகழ்ச் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச் சொல்லைக் கொண்டோதான் நிர்ணயிக்கப்படும்.

கலைஞர் மு. கருணாநிதி



# தக்கார் குரல் இதழ் வெளியீட்டு விழா



நசுக்கப்பட்டும் சாமானியர்களின் குரல் ஒலி ஓங்கி ஒலிப்பதற்காகவும், சாமானியர் பிரச்சனை முதல் சமூக பிரச்சனை வரை அனைத்தையும் நடுநிலை கண்ணோட்டத்துடன் அனைவருக்கும் தெரிவிக்கவும், இந்தியாவின் மகான் காந்தியின் நினைவு நாளில் அவருடைய அஹிம்சை கொள்கைகளை ஏற்று அவருடைய அறவழிப்போராட்டத்தை பின்பற்றும் வகையில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பிறந்த குழந்தையின் பெயர் தான் தக்கார் குரல்.

‘தக்கார்’ இதனுடைய பொருள் நடுநிலையானவன் அல்லது தகுதியானவன் என்பதாகும். இந்த தக்கார் குரலின் பிறந்த நாள் சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் அக்.2ம் தேதி நடைபெற்றது. தக்கார் குரலின் ஆசிரியரும், வெளியீட்டாளருமான யூசுப் பாஷா தலைமையிலும், சென்னை உயர்நீதிமன்றத்தின் மேனாள் நீதியரசர் பா.ஜோதிமணி, அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியின் நிர்வாக அலுவலர் துணை ஆட்சியர் டீ.முரளி, மூத்த பத்திரிக்கையாளர் ம.வீ.ராஜதுரை, சென்னை பத்திரிக்கையாளர் மன்ற தலைவர் ம.சுரேஷ் வேதநாயகம், பொதுசெயலாளர் மு.ஆசிப், வணக்கம் இந்தியா ஆசிரியர் ச.சஞ்சய் காந்தி, நியூஸ் தமிழ் தொலைக்காட்சியின் பணி ஒதுக்கீடு துறை தலைவர் எஸ்.பாண்டியம்மாள் ஆகியோர் முன்னிலையில் சாமானியர்களின் குரலாகவும், சமூக பிரச்சினைகளை எடுத்து கூறும் அனைத்து உறவுகளின் ஒருமித்த குரலாகவும், அனைத்து குடும்பத்தினர் மத்தியில் தக்கார் குரல் இதழ் வெளியீட்டு விழா நடைபெற்றது.



14 ஆண்டுகளுக்கு முன்பாக நான் யூசுப்பை பார்க்கும்போது அவருடன் ஒரு நட்பிலான குடும்பம் இருந்தது. இன்றும் அதேநட்பு குடும்பத்துடன் அவர் இருந்து வருகிறார். இத்தனை வருடமாகியும் ஒருவருடன் ஒரு நட்பு வட்டம் அப்படியே இருக்கிறது என்றால் அவர் எவ்வளவு தூய்மையானவராக இருப்பார். அவரை தவிர வேறு யாருக்கு உரிமை உண்டு தக்கார் பெயரில் பத்திரிக்கை தொடங்க.

கூடங்குளம் வழக்கில் நான் இறுதி தீர்ப்பு வழங்குவதற்கு சில நாட்கள் இருந்த போது, பல கோடிகள் நான் வாங்கி விட்டேன் என விமர்சனங்கள் என் மேல் எழுந்தன. நேர்மையாக இருந்தால் இது போன்ற விமர்சனங்கள் வரத்தான் செய்யும். பத்திரிக்கை துறையிலும் நேர்மையான விஷயங்களை எடுத்துரைக்கும் போது இதுபோன்ற சிக்கல்கள் வரும். அதையெல்லாம் பொருட்டாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

பா.ஜோதிமணி,
உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்



நம்மை மனிதர்களாக பண்பட்டு காட்டுவது எழுத்தறிவு. மனிதனின் மாண்பையும், மனிதநேயத்தையும் தழைத்தோங்க செய்வது எழுத்தறிவு. அதற்கு அடித்தளமாக அமைக்கப்பட்ட இந்த தக்கார் குரல் நீண்ட நெடுங்காலம் அழிவின்றி கோலோச்ச உளமாற வாழ்த்துகிறேன்.

டீ.முரளி, துணை ஆட்சியர், அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி நிர்வாக அலுவலர்



சப்ஜெக்ட் ஆப் ஆல், மாஸ்டர் ஆஃப் நன் என செய்தியாளர்களை பற்றி குறிப்பிடுவார்கள். இதன் அர்த்தம் ஒரு செய்தியாளர் என்பவர் அனைத்து விஷயங்களையும் பற்றிய அறிவு உடையவர் என்பதுதான். ஆகவே சவாலான பணியை கையில் எடுத்திருக்கும் திரு . யூசுப் இதை வெற்றிக்கரமாக வழிநடத்துவார்.

ச.சஞ்சய் காந்தி,
வணக்கம் இந்தியா நாளிதழ் ஆசிரியர்

# பிகார் தேர்தலுக்குப் பிறகு தமிழக அரசியல் மாறும்

243 தொகுதிகளையும் 7.43 கோடி வாக்காளர்களைக் கொண்ட பீகார் மாநிலத்தில் நவ.6 மற்றும் நவ.11 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. நவ.14ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் வெளியாகிவிடும்.

பாஜக இடம்பெற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணிக்கு (என்டிஏ) ஐக்கிய ஜனதா தள தலைவரான முதல்வர் நிதிஷ் குமார் தலைமை தாங்குகிறார். எதிர்புறம் லாலுவின் ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) தலைமையிலான மகாகட்பந்தன் கூட்டணியில் காங்கிரஸ், இடதுசாரிகள், விஐபி கட்சிகள் இடம்பெற்றுள்ளன. லாலுவின் மகன் தேஜஸ்வி, முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். விஐபி கட்சியின் முகேஷ் சகானி துணை முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்திய தேர்தலில் துணை முதல்வர் வேட்பாளராக ஒருவர் அறிவிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை. இதைக் கண்டு தங்களுக்கும் துணை முதல்வர் பதவி தேவை என காங்கிரஸ், இடதுசாரிகள் இப்போதே கோரிக்கை வைக்கத் தொடங்கிவிட்டன.

மகாகட்பந்தன் கூட்டணியில் தொகுதி உடன்பாடு எட்டப்படவில்லை. பிரதான கட்சிகளான ஆர்ஜேடி, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் பத்துக்கும் மேற்பட்ட தொகுதிகளில் சக கூட்டணி கட்சிகளை எதிர்த்தே போட்டியிடுகின்றன. இது இப்படியென்றால், என்டிஏ கூட்டணிக்கு நிதிஷ் குமார் தலைமை தாங்கினாலும், முதல்வர் வேட்பாளரை தேர்தலுக்கு பிறகு முடிவு செய்வோம் என அதிர்ச்சி வைத்தியம் தந்துள்ளார் அமித் ஷா. ஆக, இரு பிரதான கூட்டணிகளிலும் முரண்கள் உள்ளன. இதற்கு நடுவில், தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோரின் ஜன ஸ்வராஜ், அசாசுதீன் ஓவைசியின் மஜ்லிஸ் கட்சிகளும் களமாடுகின்றன. கருத்துக்கணிப்புகள் பாஜக கூட்டணிக்கு சாதகமான சூழல் இருப்பதாகவே காட்டுகின்றன. எனினும், தேஜஸ்வியின் பிரச்சாரம் சூடுபிடித்திருப்பதும், முகேஷ் சகானியை துணை முதல்வர் வேட்பாளராக அறிவித்திருப்பதும், தேர்தல் முடிவு எந்த திசையில் வேண்டுமானாலும் இடம்மாறலாம் என்பதை காட்டுகிறது.

பிகாரில் மகாகட்பந்தன் வென்றால் காங்கிரஸ் உற்சாகமடையும். நிச்சயம் அதிக தொகுதிகளை திமுகவிடமிருந்து எதிர்பார்க்கும். அமைச்சரவையில் பங்கு கோரும். இல்லையனில் மாற்று திட்டமாக விஜய் கட்சியுடன் இணைய திட்டமிடும். இவற்றை சமாளித்து காங்கிரஸை கூட்டணிக்குள் தக்க வைக்க வேண்டிய சவால் திமுக தலைமைக்கு இருக்கிறது. கடந்த காலங்களில் அதை அவர்கள் வெற்றிகரமாகவே சமாளித்திருக்கிறார்கள். மறுபுறம் பாஜக வென்றால், விஜய், என்டிஏ பக்கம் சாய வாய்ப்பிருப்பதாக கூறுகிறார்கள்.

கரூர் சம்பவத்துக்கு பிறகு விஜய்யை வளைக்க இரு தேசிய கட்சிகளும் தீவிரம் காட்டுகின்றன. காங்கிரஸ் விஜய் கூட்டணி அமைந்தாலும், விஜய் என்டிஏவில் இணைந்தாலும் திமுகவுக்கு தர்மசங்கடம்தான். ஆக, நவ.14க்கு பிறகு தமிழக அரசியல் களம் சூடுபிடிக்கப் போவது மட்டும் உறுதி.

– ஆசிரியர்


தக்கார் குரல்

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**S.யூசுப் பாஷா**

வழிகாட்டுதல் குழு
**ஜோதிமணி,** மேனாள் நீதியரசர் உயர் நீதிமன்றம்
**ராஜதுரை**, மூத்த பத்திரிகையாளர்
**கே.ராஜேந்திர பிரபு,** மூத்த பத்திரிகையாளர்
**ஆஷிஸ்**, சட்ட ஆலோசகர்

பொறுப்பாசிரியர் **S.சஞ்சய்காந்தி**
உதவி ஆசிரியர்கள்
**G.சதீஸ்குமார், S.சக்தி பாரதி**

சென்னை நிருபர்கள்
தலைமை நிருபர்
**பாலாஜி**

மாவட்ட நிருபர்கள்
சென்னை - **சங்கர்**
சென்னை - **M.ஹர்ஷத்**
சென்னை - **அருள்ஜோதி**
உயர் நீதிமன்றம் **க.முகேஷ்**

மாவட்ட செய்தியாளர்கள்
புதுச்சேரி - **ஏ.கே.ஆர்**
வேலூர் -**ஆர்.கே. சுரேஷ் குமார்**
காஞ்சிபுரம்- **கவீ பாலா**
இராணிப்பேட்டை - **ராஜீவ்**
திருவள்ளூர் **சுரேஷ் பாபு**
மதுரை - **கோபி கிருஷ்ணன்**
திருச்சி - **புவனேஸ்வரி**
காரைக்குடி - **விஜயலட்சுமி**
கோவை - **அருண் சங்கீத்**
ராமநாதபுரம் - **கவின்**
போடி - **விஜய்**
இணையதள ஆசிரியர்- **தீப்நாத்**
விஷுவல் எடிட்டர் -**E.காலித்**
டிஜிட்டல் மார்க்கெட்டிங் - **யுகேந்திரன்**
வடிவமைப்பு
**பாரதி டிசைனர்ஸ்,** மதுரை



மின்னஞ்சல்
thakkaarkural@gmail.com
Cell: 75500 50088



செய்திகளை உடனுக்குடன் அறிய உங்கள் போனில் ThakkaarKural App-ஐ டவுன்லோடு செய்யுங்கள்
இணையதள முகவரி
www.thakkaarkural.com

# நாகூர் தர்காவில் ஊழலா?

## தலையிடுமா தமிழக அரசு?



தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் கடற்கரையில் நாகூர் தர்கா அமைந்துள்ளது. நாகூர் ஆண்டவரான ஷாகுல் ஹமீது ஒலியுல்லா நாகூரில் வாழ்ந்தபோது அப்பகுதியில் உள்ள மக்களுக்கு ஏராளமான அற்புதங்களை செய்ததாகவும், 16ம் நூற்றாண்டில் தஞ்சாவூரை ஆண்ட அச்சுதப்ப நாயக்கருக்கு ஏற்பட்ட நோயை ஷாகுல் ஹமீது ஒலியுல்லா தீர்த்ததாகவும் வரலாறு உள்ளது. இதனால் நாகூர் தர்கா உலக பிரசித்திபெற்ற தர்காக்களில் ஒன்றாக திகழ்கிறது.

ஷாகுல் ஹமீது ஒலியுல்லாவிற்கு பிறகு அவருடைய மகனான சையது முகமது யூசுப் சாகிப் ஒலியுல்லாவின் 8 குழந்தைகள்



**NAGORE DARGAH - NAGORE - NAGAPATTINAM DISTRICT**

**INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 30TH JUNE 2023**

| EXPENDITURE | Rs. | INCOME | Rs. |
|---|---|---|---|
| To Monthly Fathiha Expenses | 4516718 | By Hundial Auction Receipts | 42328000 |
| ,, Coconut Oil | 395868 | ,, Annual Auction | 22493100 |
| ,,Generator Diesel & Maintenance | 197463 | ,, Annual Lease for Footwear | 1236000 |
| ,, Electricity Charges and Materials | 1710316 | ,, Money Order and Nerthikadan Receipts | 542252 |
| ,, Municipal Tax | 814439 | ,, Shop Building Rent | 4483980 |
| ,, Salary to Manager | 464480 | ,, Shop Building Rent - Advance | 30000 |
| ,, Salary to Staff & Other | 15191096 | ,, Shop Building Repair Donation | 50000 |
| ,, Printing & Stationery | 155841 | ,, Donation - Shop Name Transfer | 1575000 |
| ,, Vehicle Rent | 430975 | ,, Tender Application | 169100 |
| ,, Welcoming Expenses | 227156 | ,, Myath Fees | 2370 |
| ,, VIP & office Tea Expenses | 179850 | ,, Miscellaneous Income | 344711 |
| ,, Office Maintenance | 60909 | ,, Palmara Mudichu Income | 246487 |
| ,, Xerox, Paper and Maintenance | 56663 | ,, Keezhavanjore Hundial Receipts | 392 |
| ,, Computer Maintenance | 15921 | ,, Yahussain Palli Muharram Hundial Auction | 195000 |
| ,, Athirvedi( Gun Powder) | 30000 | ,, Silladi Dargah Hundial Auction | 2421000 |
| ,, CCTV Camera Maintenance | 45300 | ,, Bank Interest | 855589 |
| ,, Building Repair & Maintenance | 148477 | ,, Donation - Share Name Transfer | 57500 |
| ,, Pipe Repair Charges | 10000 | ,, Share Name Transfer Form | 25000 |
| ,, Orbhat Expenses | 24000 | | |
| ,, Pilgrims Facilities | 50000 | | |
| ,, Sikkala Thondi Tender | 119000 | | |
| ,, Contingency Expenditure | 66380 | | |
| ,, Annual Budget Box | 14380 | | |
| ,, Big Burial Ground Compound | 348000 | | |
| ,, Sanitary and Cleaning Materials | 108115 | | |
| ,, Engineer Estimate Fees | 43000 | | |
| ,, Miscellaneous Expenses | 33080 | | |
| ,, Advocate Fees & Court Expenses | 1849000 | | |
| C/O., | 27306427 | C/o., | 77055481 |

...2.,

VARADARAJAN & CO. CHARTERED ACCOUNTANTS NAGAPATTINAM

/ 2 /

**NAGORE DARGAH - NAGORE - NAGAPATTINAM DISTRICT**

**INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 30TH JUNE 2023**

| EXPENDITURE | Rs. | INCOME | Rs. |
|---|---|---|---|
| B/fd., | 27306427 | B/fd., | 77055481 |
| To Sahibmars Welfare Expenses | 2236500 | By Dargah Share | 304830 |
| ,, Big Kandoori Expenses | 6834214 | ,, Tasdic Allowance | 294518 |
| ,, Fire Extinguisher | 10000 | ,, Village Lease | 14000 |
| ,, Bank Charges | 5796 | ,, Toilet Auction | 2013000 |
| ,, AB Hall & office Renovation Expenses | 1400500 | ,, Donation | 15600 |
| ,, MT Emergency Expenses | 19954 | ,, Government Fund | 14000000 |
| ,, water Cooler repairs | 7200 | | |
| ,, BOT Room False ceiling | 412091 | | |
| ,, Calendar | 83750 | | |
| ,, WAKF Board Contribution | 1663478 | | |
| ,, Shed Annual Auction Shop | 62790 | | |
| ,, Tipper Diesel & Maintenance & Insurance | 18150 | | |
| ,, Govt - Burial Ground Mandapam | 2310000 | | |
| ,, ID Card | 15200 | | |
| ,, Independece & Republic Day | 34700 | | |
| ,, Internet Domain Renewal | 12690 | | |
| ,, Kadiriya Masjid Renovation | 35600 | | |
| ,, Kattubava Pallivasal Donation | 100000 | | |
| ,, Ladder | 10000 | | |
| ,, Ladies Toilet Repairs | 301000 | | |
| ,, Manager Post Advertisement | 26300 | | |
| ,, Minority Commssion Function Donation | 50000 | | |
| ,, Muthubak Thinnai Barricade | 42000 | | |
| ,, Namakku Naamae Thittam | 495000 | | |
| ,, Refund Cheque -Hundial Auction | 5000 | | |
| ,, Silladi Dargah Barricade | 175000 | | |
| ,, Small Burial Ground Terrace | 59000 | | |
| ,, Tender Advertisement | 47111 | | |
| ,, Video & Photo | 48500 | | |
| ,, Repairs & Maintenanace | 71500 | | |
| ,, SURPLUS | 49797978 | | |
| | 93697429 | | 93697429 |

VARADARAJAN & CO. CHARTERED ACCOUNTANTS NAGAPATTINAM

For VARADARAJAN & Co.,
Chartered Accountants

Partner/


**நவ.21ம் தேதி நாகூர் தர்காவில் நடைபெற உள்ள உலகப்புகழ்பெற்ற கந்தூரி திருவிழாவிற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து மட்டுமல்லாமல், வெளிமாநிலங்கள், வெளி நாடுகள் உள்பட அனைத்து பகுதிகளில் இருந்தும் பல லட்சம் பொதுமக்கள் வந்து செல்வார்கள் என எதிர்பார்க்கப்படும் சூழலில் வஃக்பு வாரியமும், தமிழக அரசும் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும், தர்காவில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.**

நாகூர் தர்காவின் அறங்காவலர்களாக தர்காவை பராமரிப்பார்கள் எனவும், இந்த 8 பேரின் குடும்பத்தார் மட்டுமே பரம்பரை பரம்பரையாக தர்காவின் நிர்வாகிகளாக இருப்பார்கள் என்றும், தர்காவின் வருமானம் அனைத்தும் தர்காவிற்கான அடிப்படை வசதிகள் செய்ய பயன்படுத்தப்படும் என்றும், மீதமுள்ள தொகையை தர்காவின் பங்குதாரர்களாக உள்ள 640 பேருக்கு பிரித்து கொடுக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தர்காவிற்கான சட்டவிதியை வகுத்தது.

இந்நிலையில் 2013ம் ஆண்டு இந்த 8 பேரில் ஒருவரான வாஞ்சூர் பக்கீர் ஷாகித் இறந்த நிலையில் அவருக்கு வாரிசுகள் இல்லாததால் அவருடைய இடத்தை பிடிப்பதற்காக தாங்கள் தான் வாரிசு என பலர் ஆதாரங்களை காண்பித்து உரிமை கோரினர். ஆனால் அதில் 4 பேரை தேர்வு செய்து சுழற்சி முறையில் அவர்கள் அறங்காவலர்களாக இருப்பார்கள் என அப்போது வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தர்கா பராமரிக்கப்பட்டு வந்துள்ள நிலையில் தற்போது தர்காவில் எந்தவித அடிப்படை வசதியும் இல்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

உலக பிரசித்திபெற்ற நாகூர் தர்காவிற்கு இஸ்லாமியர்கள் மட்டுமல்லாமல் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் என தினந்தோறும் 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வந்து செல்கின்றனர். அப்படி வருவோருக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, பார்க்கிங் வசதி போன்ற எந்த வசதிகளும் முறையாக இல்லை. மேலும், தர்காவை காண வெளிநாட்டில் இருந்து பலர் வரும் நிலையில், தங்குமிட வசதி எதையும் தர்கா நிர்வாகம் செய்து தரவில்லை. தர்காவிற்கு



NAGORE DARGAH - NAGORE - NAGAPATTINAM DISTRICT

FOR THE YEAR ENDED 30-06-2023

| | Rs. |
|---|---|
| SURPLUS - as per Income and Expenditure Account | 49797978 |
| Less: Governement Grant | 14000000 |
| | 35797978 |
| Add: Government Fund Utilized | 2310000 |
| | 38107978 |
| Less: Amount spent for Fixed Assets | 4777374 |
| NET SURPLUS | 33330604 |

For VARADARAJAN & Co.,
Chartered Accountants

Partner/

VARADARAJAN & CO. CHARTERED ACCOUNTANTS NAGAPATTINAM

தர்காவிற்கு வரும் வருமானத்தில் அடிப்படை வசதிகள் செய்தது போக மீதமுள்ள தொகையை தான் பங்குதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என்ற சட்டவிதி மீறப்பட்டிருக்கிறதா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதில் ஒரு பகுதி மட்டுமே பங்குதாரர்களுக்கு பிரித்து வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. எனில், அடிப்படை வசதிகள் எதுவும் செய்யாமல் மீதமுள்ள தொகை எங்கு செல்கிறது என்ற கேள்வியும் எழுகிறது

வருபவர்கள் தர்காவிற்கு பின்னால் அமைந்துள்ள புனித நீர் குளத்தில் நீராடி பின்னர் தர்காவிற்கு செல்வார்கள். ஆனால் தற்போது அந்த குளம் பராமரிப்பு இல்லாமல் பயன்படுத்த முடியாத நிலையில் அசுத்தமாக காட்சியளிக்கிறது என்று அடுக்கடுக்காக புகார் கூறப்படுகிறது.

தர்காவின் ஆண்டு வருமானமாக பல கோடி ரூபாய்க்கு தர்கா நிர்வாகத்தினர் வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், தர்காவிற்கு வரும் மக்களுக்காக எந்தவித அடிப்படை வசதியும் இதுவரை செய்யப்படவில்லை.

தர்காவிற்கு வரும் வருமானத்தில் அடிப்படை வசதிகள் செய்தது போக மீதமுள்ள தொகையை தான் பங்குதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என்ற சட்டவிதி மீறப்பட்டிருக்கிறதா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதில் ஒரு பகுதி மட்டுமே பங்குதாரர்களுக்கு பிரித்து வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. எனில், அடிப்படை வசதிகள் எதுவும் செய்யாமல் மீதமுள்ள தொகை எங்கு செல்கிறது என்ற கேள்வியும் எழுகிறது. நாகூர் ஆண்டவரின் வாரிசுகளான 8 பேர்தான் தர்காவின் நிர்வாகிகளாக இருக்க முடியும் என்ற சட்டவிதி இருந்தும், தர்கா நிர்வாகிகள் பதவிக்காக அவர்களே வழக்கு தொடர்ந்து தர்கா வருமானத்தை வழக்கு நடத்துவதற்காக செலவிடுகிறார்களா?, தர்காவில் ஊழல் நடக்கிறதா? என்பன போன்ற பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

தர்காக்களை கண்காணிக்கும் வஃக்பு வாரியம் நாகூர் தர்காவில் நடைபெறும் இந்த மோசடி சம்பவம் குறித்து தகவல் தெரிந்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக அரசு நாகூர் தர்கா விவகாரத்தில் ஏன் மவுனம் காக்கிறது என்ற கேள்வியும், சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் நாகூர் தர்காவில் இவ்வளவு ஊழல் நடந்தும் ஏன் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார் என்ற கேள்வியும் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

நவ.21ம் தேதி நாகூர் தர்காவில் நடைபெற உள்ள கந்தூரி திருவிழாவிற்கு அனைத்து பகுதிகளில் இருந்தும் சுமார் பல லட்சம் பொதுமக்கள் வந்து செல்வார்கள் என எதிர்பார்க்கப்படும் சூழலில் தர்காவில் இருக்கும் ஊழல் பிரச்சினையில் வஃக்பு வாரியமும், தமிழக அரசும் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும், தர்காவில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

வருகிறது

# ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம்



சாதி மறுப்பு மணம் முடிப்பவர்களை காவு கொடுக்கும் ஆணவப் படுகொலைகளை தடுப்பதற்கு தனிச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதையேற்று, சமீபத்தில் சட்டப்பேரவை கூட்டத்தில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், சாதி ஆணவப் படுகொலைகளை தடுக்கும் வகையிலான சட்டத்தை இயற்றுவதற்கு பரிந்துரைகளை அளிப்பதற்காக, சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

ஆணவப் படுகொலை தடுப்பு சட்டத்தை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள இந்த கொள்கை முடிவு சாதி மறுப்பு திருமணம் செய்து கொள்பவர்கள், அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பவர்கள், சாதி மறுப்புத் திருமணங்களை ஆதரிப்பவர்கள் என பலருக்கும் பெரும் உறுதுணையாக இருக்கப்போகிறது.

ஏற்கனவே உள்ள சட்டப்பிரிவுகளால் குற்றத்தை கட்டுப்படுத்த முடியாததால், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுக்காக்கும் சட்டம் (POCSO Act), பாலியல் துன்புறுத்தலிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் (POSH Act) உள்ளிட்டவை கொண்டுவரப்பட்டன. அதில் வழங்கப்பட்டுள்ள தண்டனையைப்போல, ஆணவக்கொலை தடுப்புச் சட்டத்திலும் இருக்கும் என்பதால், வழக்கமான கொலை வழக்கில் விதிக்கப்படக்கூடிய தண்டனையை விட கடுமையான தண்டனையை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஆணவக் கொலை என்கிற கொடுங்குற்றம் புரிபவர்கள் மட்டுமல்லாமல், சாதி மறுப்பு மணம் முடிப்பவர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் மீதான குற்றங்களான ஊரை விட்டு ஒதுக்கிவைத்தல், சுற்றுவட்டாரத்தில் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கிடைப்பதை தடுத்தல், வீடுகளை கொளுத்துதல், வாடகை வீடு தராமல் இருத்தல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களும் இந்த சட்டத்தால் தண்டிக்கப்படுவர்.

தற்போதுள்ள சட்டங்களின்படி ஆணவக்கொலை செய்தவர் பட்டியல் இனம் அல்லது பழங்குடி இனத்தை சாராதவராக இருக்கும்பட்சத்தில், பாரதிய நீதிச் சட்டம் மற்றும் வன்கொடுமை தடுப்பு சட்டங்களில் வழக்குப்பதிவு செய்யப்படும் நிலையில், புதிய சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் அதன் சட்டப்பிரிவுகளும் சேர்க்கப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்படும். இதனால், தண்டனை காலம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அதேபோல, சாதி மறுப்பு திருமணம் முடிக்கும் இருவருமே எஸ்.சி. அல்லது எஸ்.டி. யை சேர்ந்தவர்களாக இருந்து, அவர்களில் ஒருவர் ஆணவப் படுகொலை செய்யப்படும்பட்சத்தில்,

தற்போது BNS சட்டத்தில் மட்டுமே வழக்குப்பதிவு செய்ய முடியும். ஆனால் ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம் உருவாக்கப்பட்டால், குற்றம் புரிபவர் எந்த வகுப்பை சார்ந்தவராக இருந்தாலும் குற்றம்சாட்டவராக வரையறுக்கப்படுவர்.

ஆணவத்தை அழித்து, சாதி மறுப்பாளர்களை காக்கும் தீப்பந்தமாக ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டத்திற்காக நீதிபதி கே.என்.பாஷா ஆணையம் அளிக்கும் பரிந்துரைகள் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

க.முகேஷ்

# சினிமா பாணியில் நகைக் கொள்ளை

## விரட்டி வேட்டையாடிய திருச்சி எஸ்.பி.

சென்னையைச் சேர்ந்த பிரபல தங்க நகை விற்பனை நிறுவனத்தின் பிரதிநிதிகளான குணவந்த், பிரதீப்கான் மற்றும் மகேஷ் ஆகியோர் கடந்த செப்.8ம் தேதி சேலம், கோவை, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளில் நகைகளை விற்பனை செய்ய புறப்பட்டனர். திண்டுக்கல்லில் செப்.13ம் தேதி வேலையை முடித்துவிட்டு சென்னைக்கு திரும்பி சென்று கொண்டிருந்தபோது திருச்சி சமயபுரம் இருங்கலூர் அருகே அவர்களை காரில் ஒரு கும்பல் பின் தொடர்ந்தது.

திடீரென காரை வழிமறித்த அந்த கும்பல், மிளகாய் பொடி தூவி 10 கிலோ தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றது. இச்சம்பவம் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுகுறித்து சமயபுரம் காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர். திருச்சி மாவட்ட எஸ்.பி. செல்வநாகரத்தினம் உத்தரவின் பெயரில் இன்ஸ்பெக்டர்கள் கருணாகரன், ரகுராமன் ஆகியோர் தலைமையில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. விசாரணையை எஸ்.பி. மேற்பார்வை செய்தார். முதல்கட்ட விசாரணையில் நகைகள் எடுத்து வந்த கார் ஓட்டுனருக்கு இதில் தொடர்பிருந்தது தெரியவந்தது. பின்னர், கார் டிரைவர் பிரதீப், அவருடைய நண்பர்கள் அனுமன் ராம், கைலாஷ், வினோத், பன்னாராம், முகமது சுஹைல், மனோகர்ராம், மணிஸ் சிரோகி, மங்கிலால் கனாராம் மற்றும் விக்ரம் ஜாட் ஆகியோர் கூட்டாக இந்த கொள்ளையில் ஈடுபட்டதும் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து போலீஸார் விசாரணை நடத்தியதில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் அடுத்தடுத்து கைமாறி ராஜஸ்தானை சென்றடைந்தது தெரியவந்தது. பின்னர் செல்போன் எண்ணை வைத்து தனிப்படை போலீஸார் பின் தொடர்ந்ததில் நகைகளுடன் தேவாசி, விக்ரம் ஜாட் ஆகிய இருவர் மும்பை



திருச்சி எஸ்.பி.
**செல்வநாகரத்தினம்**

ஆக்ரா தேசிய நெடுஞ்சாலையில் ஆக்ரா நோக்கி சென்றது தெரியவந்தது. இதனை அடுத்து உள்ளூர் போலீஸார் உதவியுடன் தனிப்படை போலீஸார் அவர்கள் இரண்டு பேரையும் அக்.8ம் தேதி கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 9 கிலோ 432 கிராம் நகை, 3 லட்சம் ரூபாய் பணம் மற்றும் நாட்டுத் துப்பாக்கி உள்ளிட்டவற்றை போலீஸார் பறிமுதல் செய்தனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் வடமாநிலத்தைச் சேர்ந்த கணவன் மனைவி உட்பட 3 பேரை தனிப்படை போலீஸார் கைது செய்தனர். இவ்வழக்கில் மொத்தம் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில் கைதுசெய்யப்பட்டவர்களுடன் செய்தியாளர்களை சந்தித்த திருச்சி மாவட்ட எஸ்.பி. செல்வநாகரத்தினம், கொள்ளை சம்பவம் நடந்து சில நாட்களிலேயே துரித நடவடிக்கை எடுத்து 97 சதவீத நகை பணம் மீட்கப்பட்டுள்ளதையும், விசாரணை குறித்தும் விவரித்தார். இந்த வழக்கில் சிறப்பாக பணியாற்றிய காவல் துறையினரை அவர் பாராட்டினார்.

**யார் இந்த எஸ்.பி. செல்வநாகரத்தினம்?**

இந்த வழக்கின் புலன் விசாரணையில் திறம்பட



**பிடிபட்ட கொள்ளையர்கள் மற்றும் நகைகளுடன் திருச்சி போலீஸார்.**

செயல்பட்ட திருச்சி எஸ்.பி. செல்வநாகரத்தினம் சென்னையில் 1986 மே 31இல் பிறந்தவர். பட்டப்படிப்பை முடித்து 2014ம் ஆண்டு ஐபிஎஸ் தேர்ச்சி பெற்ற அவர் வடமாநிலங்களில் காவல் அதிகாரியாகப் பணியாற்றினார். தொடர்ந்து, தமிழ்நாடு காவல்துறையில் சென்னை காவலர் பயிற்சிப் பள்ளியில் துணை இயக்குநராகவும் அதன் பின்பு பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு பொறுப்புகளிலும் பணியாற்றியுள்ளார். அக். 2024 முதல் சென்னை செயின்ட் தாமஸ் மவுன்ட் காவல் துணை ஆணையராக பணியாற்றிய அவர், பின்னர், திருச்சி எஸ்.பி.யாக கடந்த ஜன.6ம் தேதி பொறுப்பேற்றார்.

இதைத் தொடர்ந்து திருச்சி மாவட்ட சட்டம் ஒழுங்கில் பல்வேறு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். ரௌடிகள் மற்றும் சரித்திரப் பதிவேட்டுக் குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை, சொத்து விவகாரங்களில் விரைந்து வழக்குகளை முடிக்க அறிவுறுத்தல், குற்றங்களை முன்கூட்டியே தடுக்கும் வகையிலான நடவடிக்கைகள், மக்களின் குறைகள் உடனுக்குடன் களைந்து தீர்வு காண்பது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தந்து செயல்பட்டு வருகிறார். பொது காவல் மக்களுடனான துறையினரின் நல்லுறவை மேம்படுத்தவும், போலீஸாரின் குறைகளை கேட்டறிந்து அவர்கள் மனச்சோர்வின்றி பணியாற்றவும் வழிவகை செய்து வ ருகிறார்.

தற்போது, கிராமப்புறங்களில் மற்றும் மலைப்பகுதிகளில் போதைப்பொருள் விற்பனை மற்றும் கள்ளச்சாராயம் காய்ச்சுவது போன்ற புகார்கள் வராத வண்ணம் தொடர்ந்து 24 மணி நேரமும் போலீஸார் சோதனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக கோவில் திருவிழாக்களில் சண்டை சச்சரவுகள் எழாமல் இருப்பதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

வழக்கமான போலீஸ் பணியோடு, இளைஞர்கள் இருசக்கர வாகன சாகசங்களை தவிர்க்கவும், பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். இதனால், எஸ்.பி. செல்வநாகரத்தினம் பதவியேற்ற சில நாட்களிலேயே இவ்வளவு பெரிய குற்றச்செயல் உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதால் பல்வேறு தரப்பினரும் எஸ்.பி.க்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

**புவனேஸ்வரி, திருச்சி**

# அதிமுக கோட்டையை தகர்க்குமா திமுக?


அதிமுகவின் எஃகு கோட்டை என போற்றப்படும் கோவையை கைப்பற்ற நினைக்கும் திமுகவின் கனவு பலிக்குமா என்பதுதான் கொங்குப் பகுதி மக்களின் பரபரப்பான பேசுபொருளாக தற்போது உள்ளது.

தமிழகத்தின் மேற்கு மண்டல தலைமை இடமாகவும் கொங்கு மண்டலத்தில் தலைமையகமாகவும் இருப்பது கோவை மாவட்டம். தமிழக அரசியல் வரலாற்றில் அதிமுகவிற்கு எப்போதும் சாதகமாகவும், எஃகு கோட்டையாகவும் இருந்து வருவது கோவை மாவட்டம்.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் 15 சட்டமன்ற தொகுதிகளுடன் தேர்தலை சந்தித்த கோவை மாவட்டம், 2009 ல் திருப்பூர் மாவட்டம் உதயமான பிறகு 10 தொகுதிகளாக சுருங்கியது.

தொடர்ந்து 2011ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 10 தொகுதிகளில் அதிமுக கூட்டணி 9 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அடுத்து வந்த 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஒரே ஒரு தொகுதியில் திமுக வெற்றி பெற 9 தொகுதிகளையும் தன் வசப்படுத்தியது. அதைத்தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் அதிமுக ஆட்சியை இழந்தாலும் கோவை மாவட்டத்தில் பத்துக்கு பத்து என்று நூறு சதவீத வெற்றியை பெற்று முத்திரை பதித்தது அதிமுக.

இந்த வெற்றி அதிமுகவிற்கு கிடைத்த வெற்றி என்றாலும் கோவையை பொறுத்த வரை அதிமுகவின் வெற்றி முகமாக அறியப்படும் எஸ்பி வேலுமணிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவே பார்க்கப்பட்டது. அதற்கு காரணம் 2016ஆம் ஆண்டு தேர்தல் வரை, மறைந்த முதல்வர் ஜெயலலிதா சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டதன் அடிப்படையில் மக்களின்




பேராதரவு அதிமுகவிற்கு இருந்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால், 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா இல்லாமல் அதிமுக சந்தித்த தேர்தல் என்பதால் அதில் கோவை மாவட்டத்தில் முழு வெற்றி பெற்றோம் எனவே கோவை அதிமுகவின் கோட்டை என்று அதிமுகவினர் மார்தட்டி வருகின்றனர்.

இருப்பினும் ஜெயலலிதா இல்லாமல் சந்தித்த 2019 மற்றும் 2024 நாடாளுமன்ற தேர்தல்களில் அதிமுக கோவையில் படுதோல்வியை சந்தித்தது. எனினும், ‘சட்டப் பேரவைத் தேர்தல் வேறு, நாடாளுமன்ற தேர்தல் வேறு. நாடாளுமன்ற தேர்தலில் சரியான கூட்டணி அமையவில்லை. ஆனால் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்களின் ஆதரவு எப்போதும் அதிமுகவுக்குத்தான்’ என்று அக்கட்சியினர் கூறி வருகின்றனர்.

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே உள்ள நிலையில் ஒவ்வொரு கட்சியும் கூட்டணி அமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. ஆனால் கோவையை பொறுத்தவரை திமுக அதிமுக என இரு கட்சிகள் இடையேதான் கடும் போட்டி என்பது நிலவி



வருகிறது.

இந்த நிலையில் தான் கோவை மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அமைச்சர் பதவி இல்லை என்றாலும் கோவை திமுகவின் முடிசூடா மன்னனாகவே வலம் வருகிறார். கோவை மாவட்டத்தை பொருத்தவரை திமுகவில் வட்டச் செயலாளர் முதல் மாவட்ட செயலாளர்கள் வரை நியமனம் செய்வதும் அவர்களுக்கான வருமானத்தை நிர்ணயம் செய்வதும் செந்தில் பாலாஜி தான் என்பதும் செந்தில் பாலாஜியின் அனுமதியின்றி கட்சியில் ஒரு அணுவும் அசைய கூடாது என்பதும் எழுதப்படாத விதியாகவே இருக்கிறது.

இந்த நிலையில் கோவை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளையும் திமுக ஒட்டு மொத்தமாக வென்றெடுக்க வேண்டும் என கங்கணம் கட்டி பணியாற்றி வருகிறார் செந்தில் பாலாஜி. 'நாம ஜெயிக்கிறோம், நாம மட்டும் தான் ஜெயிக்கிறோம்' என்ற தாரக மந்திரத்தை கட்சியினர் ஒவ்வொருவருக்கும் எடுத்துக் கூறி ஒவ்வொரு திமுகவினரையும் வேலை வாங்கி வரும் செந்தில் பாலாஜி, எப்படியும் வரும் 2026 தேர்தலில் கோவையை அதிமுக வசம் இருந்து பறிக்க வேண்டும் என உறுதி ஏற்று செயலாற்றி வருகிறார்.

அதேநேரம், முன்னாள் அமைச்சரான அதிமுகவின் எஸ்பி வேலுமணி தலைமையில் கோவை மாவட்டத்தை முழுமையாக கைப்பற்றுவோம் என கூறி அதற்குரிய முயற்சியில் இறங்கியுள்ளனர் அதிமுகவினர். பொதுவாகவே கோவை மாவட்டத்தில் சமுதாய வாக்குகள் என்பது முக்கியத்துவம் பெறுகிறது. அதில் குறிப்பாக மாநகரை பொறுத்தவரை நாயுடு மற்றும் கவுண்டர் சமூகத்தினர் பெருவாரியாகவும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை கவுண்டர் சமூகத்தினர் மற்றும் ஒக்கலிகர் சமூகத்தினர் பெருவாரியாகவும் உள்ளனர். அதில் ஒவ்வொரு முறையும் அதிமுக வேட்பாளர் தேர்வு என்பது இந்த சமூகத்தினரை சார்ந்தே உள்ளது.

இது ஒருபுறம் இருக்க கோவை மாவட்டத்தின் கிராமப் பகுதிகள் பெரும்பாலும் அதிமுகவிற்கு சாதகமாகவே இருந்து வருகின்றன. பொதுவாக கிராமப்புற மக்களிடம் சென்று உங்கள் ஆதரவு யாருக்கு என்று கேட்டால் நான் 'ரெட்டெலைக்கு தானுங்க ஓட்டு போட்டேன்' என்று சொல்வது சட்டமன்ற தேர்தல் நேரத்தில் சகஜமாக கேட்கும் பேச்சுகளில் ஒன்று.

எனவே அதிமுகவிற்கான அந்த ஆதரவு பிம்பத்தை உடைக்க வேண்டும் என்பதே செந்தில் பாலாஜியின் இலக்காக இருக்கிறது. அதிமுகவின் எஃகு கோட்டை என கூறப்படும் கோவை மாவட்டத்தை வென்று திமுக தலைமைக்கு பரிசாக வழங்கி தனது முழு பலத்தை நிரூபிக்க வேண்டும் என்று சபதம் ஏற்று செயல்பட்டு வரும் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தற்போதே அதற்குரிய பணிகளை துவங்கியுள்ளார்.


அதன் முன்னோட்டமாகத்தான் கடந்த தீபாவளி பண்டிகையை ஒட்டி அனைத்து வார்டு செயலாளர்கள் பகுதி செயலாளர்களுக்கு நல்ல கவனிப்பை காட்டியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர்களுக்கு பரிசுப் பொருட்களோ பரிசுத் தொகையோ என எதைக் கொடுத்தாவது வாக்குகளை வாரிக் குவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் காய் நகர்த்தி வரும் திமுகவின் செந்தில் பாலாஜிக்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என அக்கட்சியின் தலைமையும் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் அதிமுகவின் கோட்டையை கைப்பற்றி அதில் திமுக கொடியை பறக்க விடுவேன் என்று சபதமேற்றிருக்கும் செந்தில் பாலாஜி வெற்றியை பெறுவாரா? அல்லது எங்கள் கோட்டையில் யாரும் நுழைய முடியாது என்று கோட்டை கதவுகளை இருக்க மூடி மீண்டும் வெற்றியை எஸ்பி வேலுமணியே தக்க வைப்பாரா? என்ற எதிர்பார்ப்பு கோவை மாவட்ட அரசியலில் இப்போதே எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது.

**அருண் சங்கீத், கோவை**

# அருந்ததியினர் காலனியில் அதிகாரிகளின் பாராமுகம்





வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தாலுகா வல்லண்டராமம் கிராமத்தில் உள்ள அருந்ததியர் காலனியில் சுமார் 20க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இப்பகுதியில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு மூலம் சாலை அமைத்து தரப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு 2015ல் வந்த காட்டாறு வெள்ளத்தின் காரணமாக சாலைகள் அனைத்தும் முழுவதுமாக சேதமடைந்துவிட்டது. அதன் பிறகு சாலை அமைத்து தரக்கோரி பஞ்சாயத்து தலைவரிடம் பலமுறை முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அணைக்கட்டு தொகுதி எம்எல்ஏ ஏபி.நந்தகுமார், வேலூர் எம்.பி. கதிர்ஆனந்த் என அனைவரிடத்திலும் மனு கொடுத்தும் எந்தப் பயனும் இல்லை என இப்பகுதி மக்கள் வேதனையுடன் குறிப்பிடுகின்றனர். இதுபோன்று பல்வேறு துறை அதிகாரிகளிடமும் பலமுறை மனு அளிக்கப்பட்டுவிட்டது.

எனவே, அடிப்படை வசதி இல்லாத ஒரு தெருவாக அருந்ததியர் காலனி உள்ளது. இதன் விளைவாக அங்கு வசிக்கும் சிலர் அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டனர். சரியான சாலை வசதி இல்லாததால் அங்கு வாழும் அருந்ததியர் இன மக்கள் பள்ளிக்கு செல்வதிலும் வேலைக்கு செல்வதிலும் கல்லூரி செல்வதிலும் பெரியளவில் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். வயதான முதியவர்கள் சாலையில் மண் தரையில் வழுக்கி விழுந்துவிடும் அபாயகரமான நிலையில்தான் அந்த சாலை உள்ளது. ஆண்டுதோறும் பருவமழையின்போது, காட்டாறு வெள்ளம் ஏற்பட்டு அப்பகுதி முழுவதும் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது.

வல்லண்டராமம் கிராமத்தில் உள்ள அனைத்து தெருக்களிலும் நன்றாக சாலை வசதி உள்ளது. ஆனால் அருந்ததியர் காலனியில் மட்டும் சாலை மிக மோசமாக உள்ளதாக அப்பகுதியினர் கண்ணீருடன் குறிப்பிட்டனர்.

**ஆர்ஜே.சுரேஷ்குமார், வேலூர்**



# நஷ்டத்தில் தவிக்கும் இலவம்பஞ்சு விவசாயிகள்

## உயர்த்தப்பட்ட ஜிஎஸ்டியால் மேலும் அடி!

தமிழகத்தில் தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர் மற்றும் வருசநாடு சுற்றுப்பகுதிகள் இலவம் பஞ்சு உற்பத்திக்கு மிகவும் பிரசித்தி பெற்றது.

இப்பகுதியில் சுமார் 15,000 ஏக்கருக்கு மேல் இலவம்பஞ்சு விவசாயம் நடைபெற்று வருகிறது. இங்கு உற்பத்தியாகும் இலவம்பஞ்சு, பஞ்சாகவும் மெத்தை தலையணையாகவும் தயாரிக்கப்பட்டு வெளி மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.



காண்பதற்கு வெள்ளிநூல்போல் காட்சியளிக்கும் இந்த இலவம் பஞ்சு, தோற்றத்தாலும் நிறத்தாலும் பட்டுப் பஞ்சு (silk cotton) என்று அழைக்கப்பட்டு வருகிறது. இந்த இலவம்பஞ்சு, நூல் நூற்பதற்கு தகுதியற்ற ஒன்றாகும். ஆனால், எளிதில் தண்ணீர் உறிஞ்சாத தன்மை கொண்டது. இலவம்பஞ்சு, மனிதர்களின் உடல் எடையை சீராக வைத்திருக்க உதவுகிறது.

மேலும், கடும் குளிரில் பணியாற்றும் ராணுவ வீரர்களுக்கான சீருடைகள் எடை குறைவான மெத்தைகள் மற்றும் ராணுவ வீரர்கள் பயன்படுத்தும் பாதுகாப்பு கவச உடைகளுக்கான உட்புற பகுதியில் மென்மையாக இருப்பதற்காக இலவம்பஞ்சு பயன்படுத்தப்படுகிறது. மழை மற்றும் குளிர்காலங்களில் உடல் தட்பவெட்ப நிலை மாறாமல் வைத்திருக்க இலவம்பஞ்சு மெத்தை மற்றும் தலையணை பயன்படும்.

மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளில் நிலவும், குளுமையும் வெப்பமும் கலந்த சீதோஷன நிலையில் சுமார் 100 அடி உயரம் வரை இது வளரக்கூடியது. உயரம் அதிகமான இந்த மரங்களில் முட்களும் காணப்படுவதால் அனுபவம் வாய்ந்தவர்கள் மட்டுமே இந்த இலவம் பஞ்சு மரத்தில் ஏறி காய்களை பறிக்க முடியும்.

மழைக்காலங்களில் இயற்கையாக கிடைக்கும் நீரை உள்வாங்கி, மார்ச் தொடங்கி ஜூன் வரையிலான



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்திடம் மனு அளித்த இலவம்பஞ்சு விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள்.

கோடைக்காலங்களில் காய்கள் முற்றி பஞ்சாக மாறும்போது இலவம்பஞ்சு பறிக்கப்பட்டு பொருட்கள் தயாரிக்க பன்படுத்தப்படுகிறது. பூச்சிக்கொல்லி மருந்துகள் எதையுமே பயன்படுத்தாமல் இயற்கையான தட்பவெட்ப நிலையை பயன்படுத்தி இதன் விளைச்சல் மற்றும் உற்பத்தி அமைவது இதன் சிறப்பம்சமாகும்.

காய் பறிக்கும் நபர் ஒருவருக்கு, ஓர் நாளுக்கு ரூ.1000 வரை சம்பளம் தரப்படுகிறது. அதேநேரம், சந்தையில் இலவம்பஞ்சு விலை மிகவும் சரிந்துள்ளது. இதனால், இலவம் பஞ்சு உற்பத்தியாளர்கள் மிகுந்த நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

**காய்பறிப்பு கூலிக்கு கூட வருமானம் கிடைக்காததால் கடந்த ஆண்டு பெரும்பாலான மரங்களில் காய்கள் பறிக்கப்படாமல் மரத்திலேயே விடப்பட்டது.**

ஒரு காலத்தில், இலவம் பஞ்சுகள் எடுக்கப்பட்ட பின்பு அதன் பட்டைகள், வீடுகளிலும் உணவகங்களிலும் தேநீர் விடுதிகளிலும் அடுப்பு எரிக்க பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் தற்போது கேஸ் அடுப்புகள் மற்றும் மின்சார அடுப்புகள் பயன்பாட்டுக்கு வந்துவிட்டதால், இலவம் பட்டைகளை கொள்முதல் செய்வதற்கு ஆள் இல்லை. இதனால், பஞ்சு எடுத்த பின்பு உள்ள பட்டைகள் தீ வைத்து எரிக்கப்படுகின்றன.

கோடை காலங்களில் உடல் நிலையை குளிர்ச்சியாகவும் சீராகவும் வைக்க உதவுகிறது இந்த இலவம் பஞ்சு. மனிதனின் உடல் வெப்பநிலையை சீராக வைத்திருக்க உதவுவதால், இலவம் பஞ்சு கொண்டு தயாரிக்கப்படும் மெத்தை மற்றும் தலையணை மற்றும் இருக்கைகளுக்கு எப்போதும் மதிப்பு அதிகம். இப்பகுதியில் திருமணம் முடித்து செல்லும் பெண்களுக்கு சீர்வரிசையில் போடிநாயக்கனூர் பகுதியில் உற்பத்தியாகும் இலவம்பஞ்சு மெத்தை மற்றும் தலையணை முக்கியமான ஒன்றாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

போடிநாயக்கனூர் சுற்றுப்பகுதியில் சுமார் 150க்கும் மேற்பட்ட மெத்தை தயாரிப்பாளர்கள் சிறு தொழிலாக இதனை செய்து வருகின்றனர். இப்பகுதியில் சுமார் 48 பஞ்சு பேட்டைகள் இயங்கி வந்தன. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இந்தோனேசியாவில் இருந்து பஞ்சு இறக்குமதி செய்யப்படுவதாலும், பாலிஸ்டர் இழை பஞ்சு மெத்தைகள் விற்பனை அதிகரித்ததன் காரணமாகவும், போடிநாயக்கனூர் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் இலவம் பஞ்சு விலை குறைந்து விற்பனை மற்றும் ஏற்றுமதி



**பஞ்சுப் பேட்டையில் பணியில் ஈடுபட்டிருந்த பெண் தொழிலாளர்கள்.**

பெரும் சரிவை சந்தித்துள்ளது. தற்போது வெறும் 8 பஞ்சு பேட்டைகள் மட்டுமே பெயர் அளவிற்கு செயல்பட்டு வருகிறது. இதனால் பஞ்சுப்பேட்டை தொழிலை நம்பி வாழ்ந்து வரும் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை வாய்ப்பு இழந்துள்ளனர்

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் தொடங்கி மே மாதம் வரையிலும் இலவங்காய் அறுவடை செய்யப்பட்டு பஞ்சாக பிரிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. விதை நீக்கப்படாத இலவம் பஞ்சு தற்போது கிலோ 45 முதல் 50 வரை மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் காய்பறிப்பு கூலிக்கு கூட வருமானம் கிடைக்காததால் கடந்த ஆண்டு பெரும்பாலான மரங்களில் காய்கள் பறிக்கப்படாமல் மரத்திலேயே விடப்பட்டது. இதனால் விவசாயிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் பல கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்பட்டது.

விதை நீக்கி நன்கு சுத்தம் செய்யப்பட்ட இலவம்பஞ்சு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 160 முதல் 170 வரை மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் பஞ்சு உற்பத்தியாளர்களும் உற்பத்தி செலவுக்குக்கூட கட்டுப்படியாகாமல் பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர். முன்பு இங்கு உற்பத்தியாகும் இலவம்பஞ்சு வகைகளுக்கு 5 சதவீதமும் மெத்தை மற்றும் தலையணை வகைகளுக்கு 12 சதவீதம் ஜிஎஸ்டி வசூலிக்கப்பட்டு வந்தது.

செயற்கை இழை மெத்தை விற்பனை அதிகரித்தும் இலவம்பஞ்சு மெத்தை விற்பனை குறைந்தும் வரும் சூழலில் ஜிஎஸ்டியை குறைக்க வேண்டும் என்று கடந்த 2 ஆண்டுகளாக இலவம் பஞ்சு உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்தனர். ஆனால், ஜிஎஸ்டி வரி சீரமைப்பின் கீழ் இலவம்பஞ்சு மெத்தை தலையணை வகையறாவுக்கு 6 சதவீத வரி உயர்த்தப்பட்டு 18 சதவீதமாக அறிவிக்கப்பட்டது. இதனால் இலவம்பஞ்சு உற்பத்தியாளர்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளனர். தற்போது ஜிஎஸ்டி வரியைக் குறைக்க கோரிக்கைகள் எழுந்து வருகிறது.

முன்னாள் முதல்வரும் போடிநாயக்கனூர் எம்எல்ஏவுமான ஓ.பன்னீர்செல்வத்தை, இலவம்பஞ்சு விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் நேரில் சந்தித்து, அரசிடம் பேசி உயர்த்தப்பட்ட ஜிஎஸ்டி வரியை குறைக்க உதவுமாறு கோரிக்கை விடுத்தனர்.

**சங்கர், போடி**

# தேர்தல் களம் 2026

## நடக்கப்போவது என்ன?



தமிழகத்தில் நடைபெற உள்ள 2026 சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக, அதிமுக, பாஜக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பாமக, தேமுதிக, நாம் தமிழர் கட்சி ஆகியவை தேர்தல் பணிகளையும், பரப்புரைகளையும் துவக்கி செயல்படுத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் பலம் வாய்ந்த கட்சிகளாக இருக்கும் திமுகவும், அதிமுகவும் பல்வேறு தேர்தல் வியூகங்களை வகுத்து செயல்பட்டு வருகின்றனர். திமுக தற்போது ஆளுங்கட்சியாக இருப்பதால் மக்கள் பணியோடு சேர்ந்து தேர்தல் பணிகளை செய்து வருகிறது. அதிமுக பிரிந்து கிடப்பது அக்கட்சிக்கு பெரும் நெருக்கடியாக இருக்கிறது.

பாஜக மாநில தலைவராக இருந்த அண்ணாமலை மாற்றப்பட்ட பிறகு, அதிமுக கூட்டணியை உறுதி செய்ய வேண்டும் என்பதற்காக, அதிமுகவில் இருந்து வெளியேறி பாஜகவில் இணைந்த நயினார் நாகேந்திரனுக்கு மாநில தலைவர் பதிவு கொடுத்து அவர் மூலமாக மீண்டும் அதிமுக கூட்டணியை அக்கட்சி உறுதி செய்துள்ளது.

தவெகவை பொருத்தவரை, கரூர் சம்பவத்துக்குப் பிறகு, அக்கட்சி முடங்கிப் போயுள்ளது. கரூரில் தவெக பிரச்சாரத்தின்போது 41 பேர் உயிரிழந்த நிலையில் அந்த வழக்கு விசாரணையை சிபிஐ நடத்துகிறது. சிபிஐ விசாரணை மூலம் உண்மையில் அங்கு நடந்தது என்ன என்பது வெளிக்கொண்டு வரப்படும் என தவெகவினர் நம்புகின்றனர்.

அதிமுக பொதுக்கூட்டத்தில் காட்டப்பட்ட தவெக கொடி, தவெக தலைவர் விஜய்க்கு ஆதரவான பாஜக தலைவர்களின் கருத்து ஆகியவை, தவெகவை அதிமுக, பாஜக கூட்டணியில் இழுக்க நடக்கும் முயற்சிகளாகும். தற்போது நடைபெறும் தேர்தல் பலமுனை போட்டியாக இருந்தாலும், தவெக கட்சி அதிமுக கூட்டணியில் இணைந்தாலும் இதை எதிர்கொள்ள வலுவான கூட்டணியோடு திமுக இருப்பதாக அக்கட்சியினர் சொல்லி வருகின்றனர்.

அரசின் நலத் திட்டங்களை முன்வைத்து முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து பேசி வருகிறார். மற்றொருபுறம் எடப்பாடி பழனிச்சாமி திமுகவின் தோல்விகளை முன்னிறுத்தி பேசி வருகிறார். எதுவாக இருந்தாலும், தமிழகத்தில் எந்த கட்சி வெற்றி பெற்றாலும், பாஜக முழுமையாக தமிழக அரசியலில் காலூன்றும் தேர்தலாக இந்த தேர்தல் அமையப் போகிறது என்பது மட்டும் நிதர்சனம்.



# ரவுடி நாகேந்திரன் வாழ்க்கை
## சமூகத்துக்குக் கற்றுத்தரும் பாடங்கள்..!

– **ராஜதுரை, மூத்த பத்திரிகையாளர்**

**ஒரு ரவுடியின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டது சென்னை மாநகர வரலாற்றில் இதுதான் முதல் தடவையாக இருக்கக்கூடும்.**

**ஓர் இளைஞன் எப்படிப்பட்ட வழிமுறைகளை பின்பற்றக் கூடாது என்பதை தன் வாழ்வியல் மூலம் சொல்லி உள்ள ரவுடி நாகேந்திரன், சிறை மற்றும் காவல் துறையின் நிர்வாக சீர்கேடுகளையும் அம்பலப்படுத்தியுள்ளார்.**

சென்னை, வியாசர்பாடியைச் சேர்ந்த நாகேந்திரன், தான் ஒரு சிறந்த குத்துச்சண்டை வீரனாக வேண்டும் என்ற எண்ணத்துடன் தான், சர்மா நகரில் உள்ள குத்துச்சண்டை பயிற்சி வகுப்பில் சேர்ந்தார். ஆனால் அங்கு கிடைத்த தீய நட்பு அவரைத் தடம்புரள வைத்தது. அங்குக் குத்துச்சண்டை கற்றுக் கொள்ள வந்த ரவுடி விஜி மூலம் ரவுடி வெள்ளை ரவியுடன் பழக்கம் ஏற்பட்டது.

வெள்ளை ரவிக்காக ஒரு கொலை வழக்கில் சிக்கி, தொடர்ந்து பல வழக்குகளில் கைதாகி ரவுடிகளின் பட்டியலில் நாகேந்திரன் இடம்பெற அந்தத் தொடர்பு காரணமாக அமைந்தது. கூடா நட்பு கேடாய் முடிந்தது.

அதிமுக பிரமுகர் ஸ்டான்லி சண்முகத்தைக் கொலை செய்த வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியாகி சிறைக்கு சென்ற பிறகாவது திருந்தி இருந்தால் மறுவாழ்வு பெற்றிருக்கலாம்.

ஆனால் தீய சகவாசம் இவரை விடுவதாக இல்லை. சிறையில் இருந்தபடியே ரவுடியிசத்தைத் தொடர்ந்ததால் இவரால் சிறை வாழ்க்கையின்போது, நன்னடத்தைச் சான்று பெற இயலவில்லை. இவர் மீது தொடர்ந்து கிரிமினல் வழக்குகள் பதிவானதால் 25 ஆண்டுகள் கடந்த பிறகும் விடுதலை கிட்டவில்லை.

தன் மகன்களாவது நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவர்கள் இருவரையும் படிக்க வைத்தார். புகழ்பெற்ற லயோலா கல்லூரியில் சேர்ந்து தன் மகன் படிக்க வேண்டும் என்று விரும்பினார். மூத்த மகன் அஸ்வத்தாமனும்

தந்தையின் அந்த எண்ணத்தை நிறைவேற்றினார்.

ஆனால் தந்தையாருடைய குற்ற செயல்களின் தாக்கம் அவரை துரத்திக் கொண்டே இருந்தது. காவல்துறையினரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி மனதளவில் பாதிக்கப்பட்டார். எனவே, தன் மூத்த மகனை வெளி மாநிலத்துக்கு அனுப்பி சட்டம் பயில வைத்தார். மனதளவில் நாகேந்திரன் திருந்தாததால் மகனைப் படிக்க வைத்தும் பயனில்லாமல் போயிற்று.

பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட செயலாளர் தென்னரசு கொலை வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்ட நாகேந்திரன், அக்கட்சியின் மாநில செயலாளர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கிலும் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டு, அது மாநில அளவில் பேசு பொருளானது.



இன்றைக்கு, சிறைத் துறை மற்றும் காவல் துறையின் ஓட்டைகள் நிறைந்த செயல்பாடுகள் நிர்வாக சீர்கேடுகள் நாகேந்திரன் வாயிலாக அம்பலப்பட்டு நிற்கிறது. தன்னைப்போல் வந்து விடக்கூடாது என்று இவர் யாரை விரும்பினாரோ அந்த மகன் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார். இரண்டாவது மகன் அஜீத்தும் ஜெயிலில் இருக்கிறார்.

தந்தை பரோலில் வரும்போது அவர் முன்னிலையில் திருமணம் செய்து கொள்ளலாம் என்று காத்திருந்த அஜீத், ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட பெண்ணோடு, தந்தையின் உடல் அருகே திருமணம் செய்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

தென்னரசு கொலை வழக்கிலும் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கிலும் மூளையாக இருந்து செயல்பட்டதாக நாகேந்திரன் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இந்த சதி வேலையில் அவர் 3 இடங்களில் ஏதாவது ஒன்றில் இருந்து செயல்பட்டு இருக்கலாம் என்று போலீஸார் கருதி விசாரித்தனர். சிறையில் இருக்கும்போது சிறை அலுவலர்கள் உதவியுடன் செல்போனைப் பெற்று சதிகாரர்களுடன் பேசியிருக்கலாம், பரோலில் வீட்டுக்கு வரும்போது உடன் இருக்கும் காவலர்களை கைக்குள் போட்டுக்கொண்டு இந்த வேலையில் ஈடுபட்டிருக்கலாம் அல்லது தன் உடல் நோய்க்காக சிகிச்சை பெற மருத்துவமனைக்கு வரும்போது சதித்திட்டம் தீட்டி கொடுத்திருக்கலாம் உள்ளிட்ட கோணங்களில் காவல்துறை விசாரித்தது. எது எப்படி இருந்தாலும், சிறைத்துறை காவல்துறையின் நிர்வாக சீர்கேடுகள் அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது.

பொதுவாக, ரவுடிகள் பகை ரவுடி குழுக்களால் கொல்லப்படுவார்கள் அல்லது போலீஸ் என்கவுண்டரால் தீர்த்து கட்டப்படுவார்கள். நாகேந்திரனோ இவ்விரண்டில் இருந்தும் தப்பி, நோயுற்று உயிரிழந்துள்ளார். ஆனாலும், ஒரு ரவுடி தானும் அழிந்து தன் குடும்பத்தையும் நடுத்தெருவில் நிற்கவைத்துவிட்டு போவதைத் தான் நாகேந்திரனும் செய்துள்ளார்.

ரவுடிகளின் வாழ்க்கை மிகவும் துயரத்தில் முடிவது இயல்பு. சகல பலத்துடன் ரவுடிகள் இருக்கும்போது அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கத்தினரும் அவர்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் பலம் குன்றிய காலத்தில் கைவிட்டு விடுவார்கள்.

காவல்துறையில் உள்ள குற்ற ஆவணங்களின்படி, ஒரு ரவுடி தன் தவற்றை உணர்ந்து திருந்துகிற காலத்தில்தான் எதிரிகளால் பெரும்பாலும் கொல்லப்படுகிறான் அல்லது பழைய வழக்குகளைக் காட்டி காவல்துறையால் தீர்த்து கட்டப்படுகிறான்.

“முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்“ என்ற வள்ளுவர் வாக்குப்படி, நாகேந்திரன் ஆற்றிய வினைகளுக்கு எதிர் வினைகள் நிகழ்ந்துள்ளன. உயிரோடு இருந்தபோது அவருக்கு நேரடியாக மறைமுகமாக உதவி செய்தவர்களில் பெரும்பாலானோர் இன்றைக்கு அவல நிலையில் உள்ள நாகேந்திரன் குடும்பத்துக்கு கண்டிப்பாக உதவி செய்ய மாட்டார்கள், இதுதான் வரலாற்று உண்மை.!

# அமர்ந்த இடத்திலிருந்தே ஆட்டுவிக்கும் இருவர்



நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பாஜக மத அரசியல் செய்வதாக பிரச்சாரம் மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல் நடைபயணம் சுற்று பயணம் என பாஜகவிற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். தமிழகத்தில் பாஜக எதிர்ப்பு முகமாக விளங்கும் திமுக தலைவர் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் இண்டியா கூட்டயில் முக்கிய செயல்தலைவராக திகழ்ந்தார்.

ஆனால், இண்டியா கூட்டணியின் செயல்பாடுகளை தேசிய கட்சியாக இருந்தால் அதற்கான பாணியிலும், மாநில கட்சியாக இருந்தால் அதற்கான பாணியிலும் அமர்ந்த இடத்தில் இருந்தபடியே சிதறடித்து வருகிறது பாஜக. தற்போது தேர்தல் வைத்தால் கூட மீண்டும் பாஜக வெற்றி பெறும் சூழ்நிலையை பாஜக உருவாக்கி உள்ளது.

காங்கிரஸ் கட்சி தலைவர்களின் நடைபயணமாக இருந்தாலும் சரி சுற்று பயணமாக இருந்தாலும் சரி, அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், நாடு முழுவதும் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளுக்கு செல்லும்போதே பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் தங்களின் செயல்பாடையும், காங்கிரஸ் கட்சியின் தோல்வியையும் எடுத்துரைக்கின்றனர்.

இதேபோல் தங்களுக்கு எதிராக கருத்துகளை பதிவு செய்யும் மாநில கட்சிகளை அந்தந்த மாநிலங்களில் தங்களுக்கென இருக்கும் கூட்டணி கட்சிகளை வைத்து மாநிலத்தில் அக்கட்சி எதுவும் செய்யவில்லை என பரப்புரை செய்து மாநில கட்சிகளின் திட்டங்களையும் முறியடிக்கிறது பாஜக.

தேசிய கட்சியோ, மாநில கட்சியோ எந்த கட்சியாக இருந்தாலும் பாஜகவுக்கு எதிரான செயல்பாடு மற்றும் கருத்துகளை, அமர்ந்த இடத்தில் இருந்தே ஆட்டத்தை கலைக்கும் வித்தகர்களாக பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் இருந்து வருகின்றனர்







# குற்றங்களை குறைக்கும் தாம்பரம் போலீஸின் புதிய உத்தி

வடசென்னை என்றாலே குற்றப்பின்னணி அதிகம் உள்ள பகுதியாக பார்க்கப்படும் நிலையில், தென்சென்னைக்குள்ளும் ஒரு வடசென்னை உள்ளது என்ற தகவல் நிறைய பேருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

சென்னை மாநகர காவல் ஆணையரகத்தின் எல்லை மிகப்பெரியதாக இருந்துவந்த நிலையில் அதில் இருந்து தாம்பரம், ஆவடி என 2 காவல் ஆணையர் அலுவலகம் பிரிக்கப்பட்டு 2022 ஜன.1 ம் தேதி முதல் இயங்கி வருகிறது. தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம், தாம்பரம் மற்றும் பள்ளிக்கரணை என 2 காவல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.


சென்னையில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த நபர்கள் தாம்பரம், பல்லாவரம், குரோம்பேட்டை, பெருங்களத்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி, கேளம்பாக்கம் உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் தஞ்சமடைவதை வழக்கமாக கொண்டிருந்தனர். ஆனால், தற்பொழுது தாம்பரம் தனி காவல் ஆணையரகம் உருவாக்கப்பட்டுள்ளதால், குற்றச் செயல்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையை பெருமளவு குறைந்துள்ளது.

குறிப்பாக சென்னை மாநகர காவல் ஆணையரகம் கட்டுப்பாட்டில் இருந்தபோது புறநகர் பகுதிகளான கண்ணகி நகர், செம்மஞ்சேரி சுனாமி குடியிருப்பு, பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் வார இறுதி நாட்களில் மக்கள் நடமாட்டம் உள்ள சாலை, மக்கள் வசிக்கும் குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் சம்பவங்கள் அரங்கேறுவது வாடிக்கையாக இருந்து வந்தது.

தற்பொழுது புறநகர் பகுதிகளுக்கென தாம்பரம் காவல் ஆணையரகத்தை உருவாக்கியது முதல் பொதுமக்களை அச்சுறுத்தும் செயல்கள் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. புறநகர் பகுதிகளில் குற்றச் செயல்கள் குறிப்பிடும்படியாக குறைந்துள்ளது. மேலும், குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் நபர்கள் சிறை சென்று வந்த பிறகு மீண்டும் திருந்தி வாழும் அளவிற்கு குற்றச்செயல்கள் குறைந்துள்ளது.

இதேபோல் தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அலுவலக சரகத்தில் கஞ்சா வியாபாரிகள் பலரை கைது செய்து அவர்களிடமிருந்து ஆயிரம் கிலோவுக்கு மேல் கஞ்சா பறிமுதல் செய்து, போதை தரக்கூடிய ஆயிரக்கணக்கான மாத்திரைகளையும் பறிமுதல் செய்து போதை வாஸ்துகளின் நடமாட்டாத்தையும் குறைத்துள்ளனர் தாம்பரம் ஆணையரக போலீஸார்.

என்னதான் மாஸ்டர் பிளான் போட்டு கஞ்சா, கோகைன், போதை மாத்திரை, குட்கா உள்ளிட்ட போதை வாஸ்துகளை விற்பனை செய்தவர்களை பிடித்து சிறையில் அடைத்தாலும், இன்னும் பல இடங்களில் குறிப்பாக தாழம்பூர், கேளம்பாக்கம் காவல் நிலைய எல்லை பகுதியில் சட்டவிரோத மஜாஜ் சென்டர், கஞ்சா விற்பனை, போதை



**பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகள் 2025ல் கபடி பிரிவில் ஈரானை வீழ்த்தி தங்கம் வென்ற இந்திய அணியில் இடம்பிடித்திருந்த தமிழக வீராங்கனையான சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த கார்த்திகா.**

மாத்திரை, குட்கா விற்பனை போன்ற சட்டவிரோத செயல்கள் சர்வசாதாரணமாக நடந்து வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சட்டி வருகின்றனர். காவல் துறையினர் இன்னும் அதிகளவு ரோந்து பணியில் ஈடுபட்டு குற்றச் செயல்களை தடுக்க அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் இருந்து தனியாக தாம்பரம் காவல் ஆணையரகம் பிரிக்கப்பட்ட நாள் முதல் காவல் துறையினரின் செயல்கள் பாராட்டும்படியே உள்ளது என பரவலாக பேசப்பட்டு வருகிறது.

குறிப்பாக குற்றச் செயல்களில் அதிகளவு ஈடுபடும் நபர்கள் வசிக்கும் பகுதியாக கண்ணகி நகர், செம்மஞ்சேரி சுனாமி குடியிருப்பு, பெரும்பாக்கம் ஆகிய பகுதிகள் பார்க்கப்பட்டன. தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அலுவலகம் பிரிக்கப்பட்டதை தொடர்ந்து கண்ணகி நகர் பகுதியில் வசிக்கும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களில் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்களுக்கு போலீஸ் பாய்ஸ் கிளப்(Police Boys Club) துவங்கி சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

கண்ணகி நகரில் போலீஸ் பாய்ஸ் கிளப் மூலம் பல வருடங்களாக தீவிர பயிற்சி மேற்கொண்டு கபடி, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் மாவட்ட அளவில், மாநில அளவில் பல பதக்கங்களை வென்ற நிலையில் (24.10.2025) ஆசிய அளவில் நடைபெற்ற கபடி போட்டியில் கண்ணகி நகரை சேர்ந்த கார்த்திகா என்ற இளம் வீராங்கனை தங்கம் வென்று தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளார். கண்ணகி நகர் என்றால் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் நிறைந்து பகுதி என்ற விமர்சனத்தை, விளையாட்டில் சாதித்து வரும் கண்ணகி நகர் பகுதி வீரர் வீராங்கனைகள் தவிடுபொடியாக்கி வருகின்றனர்.

தங்கள் காவல், பணியையும் தாண்டி இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதை தடுக்கும் வகையில் அவர்களை விளையாட்டின் பக்கம் திருப்பிவிட்டு வழிகாட்டி வரும் தாம்பரம் மாநகர போலீஸாரின் செயலை சமூக ஆர்வலர்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

**வி.ஹர்ஷத், சென்னை**

# இலங்கையை குறிவைக்கும் போதை கும்பல்



இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடியால் அத்தியாவசிய பொருள்கள் முதல் அனைத்து பொருள்களின் விலையும் பல மடங்கு உயர்ந்துள்ளது. அங்குள்ள மக்கள் நிலைமையை சமாளிக்க முடியாமல் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு அகதிகளாக வருகின்றனர். இதை சாதகமாக பயன்படுத்தி கடத்தல் கும்பல் கோடிக்கணக்கில் போதைப்பொருள்களை கடத்தி வருகின்றனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு வரையிலும் இலங்கை செல்வ செழிப்பில் சீமாட்டியாய் திகழ்ந்த நாடு. விடுதலை புலிகளின் போர், கொரோனா பெருந்தொற்று, அரசின் தவறான பொருளாதார கொள்கை என அடுத்தடுத்த நிகழ்வுகள் நாட்டை அழிவு பாதைக்கு அழைத்து சென்றுவிட்டது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக இருந்தவை தேயிலை உற்பத்தி, சுற்றுலாத் துறை ஆகியவைதான். உலகம் முழுவதும் இலங்கையின் தேயிலைக்கு தனி மவுசு இருந்தது. இதனால் அதிகளவில் தேயிலை ஏற்றுமதியும் நடைபெற்றது. அடுத்ததாக உலகம் முழுவதிலும் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு விமான சேவை உள்ள நாடாக இலங்கை இருந்தது.

தமிழகத்திக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. இங்கிருந்து லுங்கி உள்ளிட்ட ஆடைகள் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து தைலம், சோப்பு, தேயிலை கொண்டு வந்துள்ளனர். தொண்டி நம்புதாளை பகுதியில் உள்ள பெரும்பான்மையான பணக்காரர்கள் இலங்கையுடன் இன்றும் தொடர்பில் உள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு உலகையே ஆட்டிபடைத்த கொரோனா பெரும் தொற்று இலங்கையை புரட்டி போட்டது. கொரோனா காரணமாக இலங்கையின் சர்வதேச விமான சேவை நிறுத்தப்பட்டது. இதனால் சுற்றுலாப் பயணிகளின் வரவு முற்றிலும் தடை செய்யப்பட்டது. மேலும்

**சர்வதேச கும்பலின் மையமாக தொண்டி கடல் பகுதி உள்ளது .இது வரும் காலங்களில் பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்தி கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும். மாவட்ட கண்காணிப்பாளர் கடத்தலை தடுக்கும் விதம் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறார். எனினும், ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் கடற்கரை பகுதியை கடத்தலுக்கு சமூக விரோதிகள் பயன்படுத்துகின்றனர்.**





ஏற்றுமதியும் நிறுத்தப்பட்டது. வருமானத்திற்கு வழி வகுத்த இரண்டு முக்கிய வழிகள் அடைக்கப்பட்டதால் இலங்கை மெல்ல சரிவை நோக்கி பயணித்தது. நாள்கள் செல்ல செல்ல நாடு பொருளாதார சீரழிவில் சிக்கியது. கையிருப்பு குறைந்தது கடன் சுமை கூடியது.

வறுமையில் வாடிய இலங்கையை போதை மஃபியா, கடத்தலுக்கு பயன்படுத்த ஆரம்பித்தது. இலங்கைக்கு படகு மூலம் கஞ்சா உள்ளிட்ட பொருள்களை கடத்த தமிழக கடல் பகுதியையே சர்வதேச கும்பல் பயன்படுத்துகின்றனர். அதிலும் தொண்டி, எஸ்.பி.பட்டினம், நம்புதாளை உள்ளிட்ட கடல் கரையையே பயன்படுத்துகின்றனர்.

தமிழக கடல் வழியாக இலங்கையை சீக்கிரமாக சுலபமாக அடைந்து விடுவதாலும் அங்கிருந்து குறிப்பிட்ட எந்த ஒரு நாட்டிற்கும் கட்டுப்பாடே இல்லாமல் சென்று விடுவதாலும் கடத்தல் கும்பல் இந்த வழியையே பின்பற்றுகின்றனர்.

கடந்த வருடம் தொண்டி அருகே தமிழக கடல் பகுதியிலிருந்து அதிக அளவில் மஞ்சள் கடத்தப்பட்டது. இதுபோல இப்பகுதியில் மாதா மாதம் போதைப் பொருள் அதிக அளவில் கைப்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்கிருந்து போதைப் பொருள்களும் இலங்கையிலிருந்து தங்கமும் கடத்தப்படுகிறது. இலங்கையிலிருந்து கடத்தி வரப்படும் தங்கத்தை போலீஸாரை கண்டதும் அடிக்கடி மண்டபம் கடல் பகுதியில் வீசி செல்கின்றனர்.

சர்வதேச கும்பலின் மையமாக தொண்டி கடல் பகுதி உள்ளது .இது வரும் காலங்களில் பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்தி கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும்.

மாவட்ட கண்காணிப்பாளர் கடத்தலை தடுக்கும் விதம் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறார். எனினும், ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் கடற்கரை பகுதியை கடத்தலுக்கு சமூக விரோதிகள் பயன்படுத்துகின்றனர். உலக அரங்கில் இக்கடற்கரை பகுதி கடத்தல் வழிப்பாதையாக அறியப்படும் முன்பு அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கவின்,** ராமநாதபுரம்

கட்சிக்குள் மோதல் கூட்டணிக்குள் உரசல்

# என்ன நடக்கிறது புதுச்சேரி பாஜகவில்?

புதுச்சேரியில் கடந்த சில வாரங்களுக்கு முன் தொடர்ந்து 3 கொலைகள் மற்றும் வழிப்பறி சம்பவங்கள் அரங்கேறின. இது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

பாஜக முன்னாள் அமைச்சரும் எம்எல்ஏவுமான சாய்சரவணக்குமார், 'புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் இதில் கவனம் செலுத்தவில்லை. போலீஸார் ஏன் ரவுடிகளை என்கவுன்ட்டர் செய்யவில்லை?' என கேள்வி எழுப்பினார்.

மேலும், புதுச்சேரி போலீஸார் தீபாவளிக்கு செய்த துப்பாக்கியையா வைத்திருக்கிறார்கள்? இங்குள்ள துப்பாக்கியும் சுடும் என உள்துறை அமைச்சர் கூற வேண்டும். குற்றவாளிகளை அலட்சியமாக கையாள கூடாது என்று அவர் காட்டமாக கூறினார்.

இதற்கு பதில் அளித்த உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், 'காவல்துறை தனது கடமையை செய்து வருகிறது. முன்னாள் அமைச்சர் சாய்சரவணக்குமார் அமைச்சர் பதவி இல்லை என்ற விரக்தியில் பேசிக் கொண்டிருக்கிறார். அமைச்சராக இருந்தபோது பேசாமல் மௌனம் காத்தவர் தற்பொழுது பேசுவது ஏன்? தனிப்பட்ட அவரது உணர்ச்சிக்காக என்கவுண்ட்டர் செய்ய முடியாது. அவரது கற்பனைக்கு எல்லாம் பதில் சொல்லவும் முடியாது.

குண்டர் சட்டத்துக்கு என சில விதிமுறைகள் உள்ளது. அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிலர் மீது குண்டர் சட்டம் போடுவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் பரிந்துரைத்துள்ளோம். யார் வேண்டுமானாலும் குறை சொல்லலாம். ஆனால், அரசியலுக்காகவும், விளம்பரத்திற்காகவும் பேசினால் அது கண்டிக்கத்தக்கது. என்கவுண்டர் நினைத்த நேரத்தில் செய்ய முடியாது. நீதிமன்றம், மனித



உரிமை ஆணையங்கள் உள்ளன. அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டியது வரும். நீதிமன்ற நெறிமுறை வழிகாட்டுதல்படி தான் காவல்துறை செயல்படுகிறது. சாய்சரவணக்குமார் பேசுவது அபத்தமானது' என்று உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் சரமாரியாக விளாசித் தள்ளினார்.

இதைத் தொடர்ந்து மீண்டும் செய்தியாளர்களை சந்தித்த சாய்சரவணக்குமார், 'உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தொடர்ந்து எதிர் விவாதம் செய்வதை நிறுத்திக் கொண்டால் நல்லது. தனக்குத்தான் மக்கள் செல்வாக்கு உள்ளதாக நினைத்து நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த அவர், அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர். அவர் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும்' என்று மீண்டும் பேசியுள்ளார்.

பாஜக அமைச்சர் மற்றும் பாஜக எம்எல்ஏ இருவருக்கு இடையே ஏற்பட்டுள்ள உட்கட்சி மோதல் புதுச்சேரி அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, ஜே.சி.எம். மக்கள் மன்றம் என்ற பெயரில், பாஜக அமைச்சர் ஜான்குமார் முதல் பாஜக எம்எல்ஏக்கள் மற்றும் ஆதரவு எம்எல்ஏக்கள் வரை, அனைவரும் லாட்டரி அதிபர் சார்லஸ் மார்ட்டினுடன் வெளிப்படையாக கூட்டணி வைத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். அவர் கொடுக்கும் பொருட்களை தொகுதி முழுவதும் வழங்கி

வருவது முதல்வர் ரங்கசாமிக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது இதன் காரணமாக அமைச்சராக பொறுப்பேற்ற ஜான்குமாருக்கு இன்று வரை இலாக்கா ஒதுக்கப்படவில்லை,

முதல்வர் ரங்கசாமியை அவரது இல்லத்தில் சந்தித்து தீபாவளி வாழ்த்து தெரிவித்த பாஜக தலைவர் உள்ளிட்ட பொறுப்பாளர்கள், இதுகுறித்து அவரிடம் பேசியுள்ளனர். அப்போது கோபப்பட்ட முதல்வர், ‘ஜான்குமார் எந்த கட்சியை சேர்ந்தவர் என்பதை முதலில் உறுதிப்படுத்துங்கள். அவர் ஜேசிஎம் மக்கள் மன்றத்தில் முழு நேர செயல்பாட்டில் உள்ளார். எனவே அவருக்கு இலாகா ஒதுக்குவது குறித்து பாஜக மேலிடம் பேசட்டும் அல்லது பாஜக மேலிடம் அவர் எந்த கட்சியில் உள்ளார் என்பதை என்னிடம் தெரிவிக்கட்டும். அதன் பிறகு பார்க்கலாம். என்னைப் பொறுத்தவரை அவருக்கு இலாகா ஒதுக்குவது குறித்து ஆளுநரிடம் கடிதம் கொடுப்பதற்கு பதில் அமைச்சரவையில் இருந்து அவரை நீக்கி கடிதம் கொடுப்பது சரியானது என்று நினைக்கிறேன்’ என மிகவும் காட்டமாக தெரிவித்திருக்கிறார். இந்த விவகாரம் தேசிய ஜனநாயக கூட்டணிக்குள் மிகப்பெரிய விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, அனைத்து கட்சி எம்எல்ஏக்கள் மற்றும் பாஜக தலைவர் உள்ளிட்ட சிலருக்கு ஜேசிஎம் மக்கள் மன்றம் சார்பில் லாட்டரி அதிபர் சார்லஸ் மார்ட்டின், டபுள் டோர் ஃப்ரிட்ஜை தீபாவளி பரிசாக வழங்கியதாக கூறப்படுகிறது. அதை, சில எம்எல்ஏக்கள் திருப்பி அனுப்பிய நிலையில் பாஜக தலைவர் மட்டும் முழு மனதோடு ஏற்றுக் கொண்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் தீபாவளி பரிசாக தேசிய ஜனநாயக கூட்டணி எம்எல்ஏக்களுக்கு மார்ட்டின் சார்லஸ் பட்டாசுகளை வழங்கியுள்ளார். அதனை தொகுதி மக்களுக்கு வழங்கும்போது மார்ட்டின் சார்லஸ் படத்தை மறைத்து தங்கள் படத்தை சில எம்எல்ஏக்கள் ஸ்டிக்கராக ஒட்டி வழங்கியது குறித்து வீடியோகள் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன. இது முதல்வர் ரங்கசாமி உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்களிடையே கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.




**முன்னாள் அமைச்சரும் பாஜக எம்எல்ஏவுமான சாய்சரவணக்குமார்.**



**அமைச்சர் ஜான் குமார் மற்றும் லாட்டரி அதிபர் சார்லஸ் மார்ட்டின்.**




**அமைச்சர் நமச்சிவாயம்.**

**ஏ.கே.ஆர்., புதுச்சேரி**



# குழந்தைகளின் உயிர் குடித்த டானிக்



கைது செய்யப்பட்ட ஸ்ரீசன் ஃபார்மா சூட்டிகல்ஸ் நிறுவன உரிமையாளர் ரங்கநாதன்.

## அரசின் நடவடிக்கை கண்துடைப்பா?

மத்திய பிரதேசம் மற்றும் ராஜாஸ்தானில் கோல்ட்ரிப் இருமல் மருந்து குடித்து 24 குழந்தைகள் உயிரிழப்புக்கு காரணமான சுங்குவார்சத்திரத்தில் இயங்கி வரும் ஸ்ரீசன் ஃபார்மா நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்து அரசு அதிகாரிகள் இருவர் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள சுங்குவார்சத்திரத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீசன் ஃபார்மாசூட்டிகல்ஸ் (Sresan Pharmaceuticals) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 'கோல்ட்ரிஃப்' (Coldrif) என்ற இருமல் மருந்தை உட்கொண்டதால், மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துள்ளது. இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழப்புகளுக்குக் காரணமாகக் கூறப்படும் இந்த இருமல் மருந்தில், அனுமதிக்கப்பட்ட அளவைவிட மிக அதிகமாக, சுமார் 48.6% அளவில் டைஎதிலீன் கிளைக்கால் (Diethyleneglycol-DEG) என்ற நச்சு வேதிப்பொருள் கலந்திருப்பது அரசு ஆய்வகப் பரிசோதனையில் (02.10.2025) உறுதி செய்யப்பட்டுள்ளது. இது பெயிண்ட் மற்றும் பிரேக் ஆயில் போன்ற தொழில்துறைப் பொருட்களில் பயன்படுத்தப்படும் ஒரு நச்சு இரசாயனம் ஆகும்.

மத்தியப் பிரதேச மாநில சுகாதாரத் துறையின் கடிதத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டுத் துறை ஸ்ரீசன் நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வின் அறிக்கையைத் தமிழக அரசு மத்திய அரசிடம் தாக்கல் செய்துள்ளது. அதில், நிறுவனத்தின் உற்பத்தி செயல்பாட்டில் 350க்கும் மேற்பட்ட கடுமையான குறைபாடுகள் கண்டறியப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்ததாகவும், அடிப்படை வசதிகள், தகுதியான பணியாளர்கள் மற்றும் தயாரிப்புப் பாதுகாப்புக்கான சரியான நடைமுறைகள் எதுவும் இல்லை என்றும் காற்றை

**காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள சுங்குவார்சத்திரத்தில் உள்ள ஸ்ரீசன் ஃபார்மாசூட்டிகல்ஸ் நிறுவனம்.**




கையாளும் வசதிகள், சரியான காற்றோட்டம் இல்லை என்றும் துருப்பிடித்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

நச்சுப்பொருள் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக மருந்து கட்டுப்பாட்டுத் துறை மின்னல் வேக நடவடிக்கை எடுத்தது. மத்தியப் பிரதேசத்திடமிருந்து தகவல் கிடைத்த (01.10.2025) பிறகு, 24 மணி நேரத்திற்குள் ஆய்வகப் பரிசோதனை முடிவுகள் உறுதி செய்யப்பட்டு, உடனடியாக மருந்து உற்பத்தியை நிறுத்துவதற்கான ஆணை (03.10.2025) பிறப்பிக்கப்பட்டது.

மேலும், நிறுவனம் ஏன் விளக்கம் அளிக்கக்கூடாது என காஞ்சிபுரம் மண்டல மருந்து கட்டுப்பாட்டுத் துறை அதிகாரி மணிமேகலை விளக்கம் கேட்டு நோட்டீஸ் வழங்கியுள்ளார். 12ஆம் தேதிக்குள் முறையான விளக்கம் அளிக்கப்படாவிட்டால், மருந்து உற்பத்தி உரிமத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக மத்தியப் பிரதேச மாநில போலீஸார் ஏற்கனவே வழக்குப்பதிவு செய்துள்ளனர். மேலும், நச்சுத்தன்மை கொண்ட மருந்தை உற்பத்தி செய்த ஸ்ரீசன் ஃபார்மா நிறுவனத்தின் மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 10 லட்சம் அபராதமும் விதிக்கப்படும் என மருந்து கட்டுப்பாட்டு துறை அறிக்கை தெரிவித்துள்ளது. நிறுவனத்தின் மீதான விசாரணையை மேற்கொள்ள மத்தியப் பிரதேச காவல்துறையினர் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதாகவும் தகவல் வெளியாகியது

முதற்கட்ட நடவடிக்கையாக, தமிழ்நாடு உட்பட 8 மாநிலங்களில் இந்த மருந்தை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து முறையாக இந்த நிறுவனத்தில் ஆய்வு மேற்கொள்ளாத மூத்த ஆய்வாளர்கள் இருவரை தமிழக மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டது.

இந்நிலையில் மத்திய பிரதேச போலீஸார் ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தின் உரிமையாளர் ரங்கநாதனை தமிழக காவல்துறையினர் உதவியுடன் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்தனர். மேலும் நிறுவனத்தின் மேலாளர் செயல் அலுவலர் என 3 பேரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

அதனைத் தொடர்ந்து அமலாக்க துறையினர் ஸ்ரீசன் பார்மா நிறுவனத்திற்கு சொந்தமான 8 இடங்களில் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றி சென்றனர். இவையெல்லாம் மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் 24 குழந்தைகள் இறப்புக்கு பிறகுதான் நடைபெற்றது.

6 மாதங்களுக்கு ஒரு முறை மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் சார்பில் முறையாக ஆய்வு நடத்தப்பட வேண்டும், ஆனால் இங்கு முறையாக எந்த ஆய்வும் நடைபெறாததே இவ்வளவு உயிர்கள் பறிபோனதற்கு காரணம் என கூறப்பட்ட நிலையில் மூத்த ஆய்வாளர்கள் இருவரை மட்டும் பணியிடை நீக்கம் செய்துள்ளனர்.

தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் இந்த நிலைதான் நீடிக்கிறது. தவறிழைத்த அதிகாரிகளை பணியிடை நீக்கம் செய்வது மட்டுமே இறந்த உயிர்களுக்கு தீர்வாகுமா? ஒரு துறையில் உள்ள அதிகாரிகள் தவறிழைத்தால், அவரை கட்டுப்படுத்தும் தலைமை அதிகாரி மீது வரை நடவடிக்கை எடுத்தால்தான் இதுபோன்ற தவறுகள் மீண்டும் நிகழாமல் தடுக்க முடியும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

**கவீபாலா, காஞ்சிபுரம்**

இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி வட்டம் களத்தூர் கிராமத்தில் அரசு பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள பெரிய ஏரியிலிருந்து (சர்வே எண். 741) நீர் பாசனம் செய்து 3 தலைமுறைகளாக சுமார் 150 ஏக்கருக்கு மேல் விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது 10 ஏக்கருக்கு மேல் நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. அப்பகுதி விவசாயிகள் ஏரி நீர் பாசனத்தோடு, மின்சார பம்ப்செட் பெற்று நெற்பயிர், வாழை, தேக்கு உள்ளிட்ட பயிர்களை விளைவித்து வருகின்றனர்.

விவசாயிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஏரிக்கு தண்ணீர் வரும் வரத்து கால்வாய் ஓரமாக வழி பாதை அமைத்து விவசாய இடு பொருட்கள், டிராக்டர், ஏர் உழவு மாட்டு வண்டி மற்றும் அறுவடை இயந்திரம் முதலிய பணிகளுக்கு அந்த பாதையை பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில், பட்டா உரிமை இல்லாத 3 பேர் இணைந்து நீர்வரத்து கால்வாயை ஆக்கிரமிப்பு செய்ததோடு, ஏரி புறம்போக்கில் உள்ள 3 ஏக்கரை ஆக்கிரமித்து பயிர் செய்து வருவதாக குற்றம்சாட்டப்படுகிறது. இதனால் வரத்து கால்வாயில் தண்ணீர் வருவது தடைபட்டு, ஏரி முழு கொள்ளளவையும் எட்டாமல் சில மாதங்களில் வறண்டு வருகிறது.

ஒரே குடும்பத்தை சேர்ந்த இந்த 3 பேர், ஏரி நிலத்தை ஆக்கிரமித்துள்ளதோடு, விவசாய நிலத்திற்கு செல்ல வழிவிடாமல் தடை செய்து தொடர்ந்து பிரச்சினையில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர். இதனால், அப்பகுதியில் பட்டா நிலம் வைத்துள்ள விவசாயிகள் 2 போகம் பயிர்கூட செய்ய முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக அரசு அதிகாரிகளுக்கும், கிராம சபை கூட்டங்களிலும் புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. மாறாக சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு அவலூர் காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது.



இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் நேரடியாக தலையிட்டு, ஏரி நிலத்தில் உள்ள தனிநபர் ஆக்கிரமிப்பை அகற்றி, சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கு தீர்வு கண்டு, விவசாயம் செய்ய வழிப்பாதை ஏற்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் இராணிப்பேட்டை மாவட்டக் குழு சார்பில் மாவட்ட செயலாளர் எல்.சி மணி கூறியதாவது,

இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி வட்டம் களத்தூர் கிராமத்தில் விவசாயம் செய்து வரும் 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் அறுவடை செய்ய முடியாத நிலையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் நிலங்களை ஆக்கிரமித்து



**ஒரே குடும்பத்தை சேர்ந்த இந்த 3 பேர், ஏரி நிலத்தை ஆக்கிரமித்துள்ளதோடு, விவசாய நிலத்திற்கு செல்ல வழிவிடாமல் தடை செய்து தொடர்ந்து பிரச்சினையில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர். இதனால், அப்பகுதியில் பட்டா நிலம் வைத்துள்ள விவசா யிகள் 2 போகம் பயிர்கூட செய்ய முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.**



விவசாயிகளுக்கு இடையூறு அளித்து வருகின்றனர். இதுதொடர்பாக பல முறை அரசு அலுவலகங்களில் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்கள் அழுகும் நிலையில் உள்ளது. இந்த பகுதி விவசா யிகளின் பிரச்சினைகளை தீர்க்க மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் முன்வந்து நடவடிக்கை எடுத்தால் இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் தங்களுடைய அறுவடையை செய்து முடிப்பார்கள் என்றார்.

ராஜீவ், இராணிப்பேட்டை

# Toxic Cough Syrups in India

## A Growing Tragedy

**by VIJAYALAKSHMI VEERAIYAN,Finland**



In September and October 2025, at least 17 children in the districts of Chhindwara and nearby parts of Madhya Pradesh died of acute kidney failure after taking the cough syrup Coldrif, manufactured by Sresan Pharmaceutical Manufacturer in Tamil Nadu.

Laboratory tests found this medicine contained around 48.6 % diethylene glycol (DEG) which is nearly 500 times the permissible limit. In response, the government swiftly declared Coldrif and two other syrups (Respifresh TR and ReLife) "toxic", banned their sale, and arrested the manufacturer.

But this is not a first incident to happen. Since 2020, contaminated cough syrups have caused hundreds of child deaths across multiple countries. In 2022 about 66 children under the age of five died in The Gambia after consuming syrups contaminated with industrial chemicals like diethylene glycol (DEG) and ethylene glycol (EG). Around the same time, large outbreaks in countries such as Indonesia and Uzbekistan were linked to similar issues. According to the World Health Organization (WHO), more than 300 children are estimated to have died from substandard liquid oral medicines since at least 2022.

In India, regulatory reports have found over 100 cough syrup samples failing quality tests. These repeated waves of fatalities deepen concerns about drug safety, manufacturing standards and accountability in India's pharmaceutical industry.

What exactly are DEG and EG and why are they so deadly in syrups meant for children? Diethylene glycol and ethylene glycol are industrial solvents commonly used in products such as antifreeze, brake fluid and industrial coolants. They are not acceptable excipients in medicines. Children are especially vulnerable

because even very small doses relative to body weight can cause severe kidney damage, liver failure and death.




In the case of Coldrif, the detection of 48.6% DEG in a syrup marketed for children is extraordinarily high. It is far beyond the allowable limit (often <0.1%). Investigations of previous outbreaks revealed that cheaper raw materials are being substituted. There is inadequate testing and poor regulation of manufacturing plants.

The tragedy in Madhya Pradesh emerges from this larger systemic problem. According to reports, bottles of the suspect batch were seized. The authorities froze 433 bottles of Coldrif in one district after tracing many sold units. The local drugs control department in Tamil Nadu also shut the manufacturing unit when the adulterated batch was confirmed.

All of this points to a combination of manufacturing negligence, regulatory gaps, and market vulnerabilities especially in easily accessible medicines aimed at children.

### Who Should We Really Blame?

When a tragedy like this unfolds, people search for someone to hold accountable. Responsibility lies primarily with two parties: the pharmaceutical manufacturers that produce unsafe medicines, and the regulatory / government systems that either fail to enforce standards or allow loopholes that lead to such outcomes.

Some manufacturers exploit the demand for immediate relief in families and communities. They may substitute expensive but safe ingredients like pharmaceutical-grade glycerine or propylene glycol with cheaper, toxic alternatives such as DEG or EG. The goal shifts from healing, to profit. Investigations in previous cases found evidence of forged documentation, raw materials falsely labelled, and cost-cutting in critical safety steps.

In nations with strict oversight, these kinds of failures are rare. For example, in European countries, medicines undergo multiple layers of testing, can only be sold via licensed pharmacies which require prescriptions and come from factories audited for GMP (Good Manufacturing Practice). There is transparency, accountability and enforcement.

In contrast, in India and similar South Asian countries many medicines are available over-the - counter even strong syrups without prescription. The manufacturing units vary widely in size resources and oversight. The monitoring, random testing and enforcement may be inconsistent.

### What Do We Take Away?

This isn't just a tragic headline. It's a wake-up call. If we want to prevent such incidents from recurring, action is required at multiple levels from industry, government and community.

### 1. Pharmaceutical companies must step up

• Every medicine should be built from safe, approved raw materials. Substituting cheaper, harmful chemicals like DEG or EG is punishable.

• Factories must implement rigorous testing: raw-material checks, in-process checks, final product checks with certified labs.

• Transparent documentation, traceability of batches and accountability when shortcuts are taken.




• If a company fails or is found negligent, criminal accountability should follow not just fines. The lives lost demand it.

2. Government oversight must be stronger and consistent

• Regular, surprise inspections of manufacturing units, especially ones making high-risk child medicines (syrups, liquids).

• Random quality testing of batches in the market and recall of suspect products.

• Raw-material supply chains must be regulated: excipients must be pharmaceutical-grade and traceable.

• Public alerts via agencies like the WHO when global risks emerge, and coordination with international bodies to prevent export/import of contaminated products. The WHO recently issued an alert about three Indian syrups.

The specific products identified in the WHO alert are:

1. Coldrif – Manufactured by Sresan Pharmaceutical in Tamil Nadu.

2. Respifresh TR – Produced by Rednex Pharmaceuticals in Gujarat.

3. ReLife – Made by Shape Pharma, also based in Gujarat.

3. Consumers and society also have a role

• Awareness: Recognise that even "just a cough syrup" can carry risk if manufacturing fails.

• Use medicines judiciously: For mild coughs and colds, natural immunity, rest, hydration and general care often suffice. Over-medicating or seeking "instant relief" can encourage demand for more drugs, which industry may exploit.

•Ask questions: Was a prescription needed? Is the product from a known brand/distributor? Has it been recalled or flagged?

## Learning From Better-Regulated Systems

These deaths were reported primarily in low and middle-income countries. In well-developed countries like in west or in Europe such incidents are extremely rare. It's often said that healthcare regulation in Europe is strict and slow. Even some view it as inconvenient. But that caution is exactly what protects lives. The multiple safety checks, controlled supply, prescription requirement and well-funded oversight are not burdens they are safeguards.

India can and should learn from these models. A medicine may seem cheap and accessible today but if the cost is compromising safety the price paid in human life is far higher.

## A Call to Action


The death of children from supposedly safe cough syrups is heartbreaking. Parents trusted the system also children trusted the medicine but the system failed them. This is a collective failure of industry, regulators and society.

We must treat this not just as a news story, but as a turning point. With responsible pharmaceutical practices, stronger governance, and greater public awareness, we can build a safer environment. No family should ever lose a child because a cough syrup meant to relieve them turned fatal.



# The USA vs Russia Conflict:

## A Modern Power Struggle



by ARUL JYOTHI

The word "power" holds two meanings — the United States and Russia — but the real question is: where does the true power lie? Let's go back to the period of the Cold War (1939–1945), when the world's two most powerful nations, the United States and the Soviet Union (now Russia), emerged as superpowers. However, instead of becoming allies, they entered a long period of political tension, military rivalry, and ideological conflict — a struggle that came to be known as the Cold War.

COLD WAR- A QUICK TIME TRAVEL

The USA followed capitalism and democracy, promoting free markets and individual freedom. The Soviet Union followed communism, where the government controlled the economy and political life. Both nations believed their system was superior and tried to spread their ideologies worldwide. After WWII, Europe was divided into two: Western Europe supported by the USA. Eastern Europe controlled by the Soviet Union. The famous "Iron Curtain" separated these two blocs - symbolizing the political and military division of the world. On 1949: North Atlantic Treaty Organization (NATO) formed and Soviet Union tested its first nuclear bomb. Both sides avoided direct fighting hence the name came "Cold" War.

During 1980s, Soviet economy weakened and reforms began under Mikhail Gorbachev and by the time of 1991, The Soviet Union collapsed, ending the Cold War. The USA became the only global superpower, leading to a short period of American dominance in world affairs. The Cold War wasn't fought on battlefields but through political pressure, propaganda, military buildup, and proxy wars. It shaped international relations for nearly half a century and its legacy still influences USA–Russia relations today.

Even after the Cold War ended in 1991, tensions between the United States and Russia never completely disappeared. After the collapse of the Soviet Union, many Eastern European countries that were once part of the Soviet bloc joined NATO, a Western military alliance led by the United States. Russia viewed this as a direct threat to its national security, believing that NATO was moving too close to its borders. Meanwhile, the U.S. argued that these countries had the right to choose their own alliances.

REVIVAL OF RUSSIA

After the collapse of the Soviet Union in 1991, Russia went through a period of economic struggle and political instability. The 1990s were difficult years industries collapsed, inflation soared, and living standards fell sharply. During this time, the United States and Western nations held dominant influence over world affairs. However, in the early 2000s, Russia began to recover and rebuild its strength, especially under the leadership of Vladimir Putin. The country focused on restoring national pride, modernizing its military, and using its vast oil and gas resources to rebuild its economy.

Putin's government emphasized centralized power, nationalism, and a strong foreign policy. Russia began to play a more assertive role in international politics — opposing Western interventions, rebuilding alliances, and protecting its strategic interests in regions like Syria, Ukraine, and Eastern Europe. By the 2010s, Russia had regained its position as a major global power, challenging U.S. influence once again. This revival marked the beginning of a new era of rivalry, often described as a "Second

Cold War."

THE NEW AGE OF CONFRONTATION



Despite the end of the Cold War, relations between the United States and Russia have once again grown tense in recent years. This renewed rivalry centers on military power, influence over neighboring countries, and global leadership. The most visible and serious conflict between the two nations is the war in Ukraine. In 2022, Russia launched a full-scale invasion of Ukraine, claiming it was defending its security against NATO's eastward expansion. The United States strongly condemned the attack and, along with its allies, supplied Ukraine with weapons, intelligence, and financial aid. The conflict has since turned into a prolonged war of attrition, drawing the world into economic and political turmoil. This war is not only about territory, it's a battle over power and influence in Europe.

In response to Russia's actions, the U.S. and European nations imposed heavy economic sanctions targeting Russia's banks, trade, and technology sectors. These sanctions aimed to weaken Russia's economy and limit its global reach. However, Russia adapted by strengthening partnerships with China, India, and other Asian countries, using new trade routes and local currencies to bypass restrictions. This economic standoff has become a silent battlefield, reshaping global trade patterns. Beyond the battlefield, the two powers clash in the digital world. The U.S. accuses Russia of cyberattacks, election interference, and spreading misinformation. Russia, in turn, blames the U.S. for influencing internal politics and trying to undermine its sovereignty. Technology has become a new weapon, and information warfare is now as crucial as military strength.

CLASH ECHOES ON INDIA

The USA–Russia conflict has affected many countries that are not directly involved especially nations like India, which maintain strong ties with both sides. India has long-standing defense and energy partnerships with Russia, while also sharing close strategic and economic ties with the United States. Because of this, India has taken a neutral stance on the Russia–Ukraine war, calling for peace and dialogue instead of taking sides.

This balancing act helps India protect its national interests but also requires careful diplomacy. Amid global polarization, India has positioned itself as a voice of balance — focusing on peace, development, and South–South cooperation.

Through platforms like the G20 and BRICS, India is pushing for a more multipolar world, where developing nations have a stronger voice.

THROUGH A NEUTRAL LENS


The ongoing rivalry between the United States and Russia is not just about weapons, borders, or sanctions — it's about power, pride, and perception. Both nations see themselves as protectors of global order, yet their actions often deepen global divisions. From one side, America's push for democracy and open markets seems justified in promoting global freedom. From the other, Russia's insistence on safeguarding its security and influence reflects its long history of defending its sphere of power. Neither side is entirely right or wrong, both are driven by national interest, shaped by history and ambition.

The real challenge lies in finding a path where dialogue replaces dominance and cooperation outweighs confrontation. As the world watches, the question remains: Will this clash of giants create a new balance — or repeat the mistakes of the past?



இளம் பத்திரிகையாளராக களம் இறங்கி துடிப்புடன் பணியாற்றும் செய்தியாளராக யூசுப் இருந்து வந்துள்ளார். தற்போது இருக்கும் சூழ்நிலையில் பத்திரிக்கைத்துறையை டிஜிட்டல் தொழில்நுட்பம் ஜனநாயகப்படுத்தி இருக்கிறது. இந்த தொழில்நுட்பத்தை இன்று திரு.யூசுப் போன்ற பத்திரிகையாளர்கள் பயன்படுத்த தொடங்கி இருக்கிறார்கள். இது இன்னும் பத்திரிக்கைத்துறையை மேலதிகமாக ஜனநாயகப்படுத்தும். பெரும் ஊடகங்கள் கூட சிறு டிஜிட்டல் ஊடகங்களை பின்பற்றும் சூழல் உருவாகி உள்ளது. அந்த வகையில் பத்திரிக்கை துறையில் துடிப்புடனும், நேசிப்போடும் இருக்கும் யூசுப்பின் பத்திரிக்கை நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் எந்த மாற்று கருத்தும் இல்லை.

**ஆசிப்,**
சென்னை பத்திரிகையாளர் மன்ற செயலாளர்



களத்தில் யாருக்கு தவறு இழைக்கப்பட்டாலும் தட்டி கேட்கும் போர் குணம் கொண்டவர் தான் தக்கார் குரலின் ஆசிரியர் யூசுப். அவருடைய அன்பு அனைவரையும் கட்டிப்போடும். அவருக்கு என்ற தனி நட்பு வட்டாரம் உள்ளது. பத்திரிக்கை நடத்துவது என்பது சாதாரண விஷயம் அல்ல. ஆனால் அவரின் அன்பு குணமும், அவர் கொண்ட நட்பும் இந்த தக்காரை வெற்றியடைய செய்யும்.

**ராஜதுரை,**
மூத்த பத்திரிகையாளர்



வெளிப்படையாக செய்திகள் வெளியிடுவதில் பல சிக்கல்கள் உள்ளது. ஆனால் உள்ளதை உள்ளபடி உரக்க மக்களுக்கு சொல்ல வேண்டும் என்பதே தக்கார் குரல் நோக்கமாக இருக்கும். வாழ்த்துரை வழங்கிய சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் தலைவர் சுரேஷ் வேதநாயகம் அவர்கள் சிறு குறு பத்திரிக்கை நிறுவனங்களை அரசு கைவிடக்கூடாது என்று குறிப்பிட்டார். அரசாங்கமே கைவிடும் பட்சத்தில் சென்னை பத்திரிக்கையாளர் மன்றம் எங்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்பதே எங்கள் ஆசை. தக்கார் குரல் இதழ் வெளியிட்டு விழாவிற்கு வருகை தந்துள்ள சிறப்பு விருந்தினர்கள் மற்றும் குடும்ப உறவுகளாக வந்திருக்கும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

**சை.யூசுப் பாஷா**
ஆசிரியர்



தக்கார் குரல் ஆசிரியர் யூசுப்பின் போராட்ட குணம் எனக்கு நன்றாகத் தெரியும். தற்போது அச்சு ஊடகங்கள் சூரிய அஸ்தமனத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. இதில் பெரிய நிறுவனங்கள் தாக்குபிடித்தாலும், சிறு, குறு பத்திரிக்கை நிறுவனங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளது. சிறு, குறு பத்திரிக்கை நிறுவனங்களை மீட்டெடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள நூலகங்களுக்கு பத்திரிக்கைகளை வாங்குவதற்காக ஒரு கமிட்டி உருவாக்கப்பட்டுள்ளது. அந்த கமிட்டி மூலம் தான் நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்கி விநியோகம் செய்கிறது. இந்த கமிட்டி மூலம் சிறு, குறு பத்திரிக்கைகளை வாங்கி நூலகங்களுக்கு பயன்படுத்தினால் அவர்களுக்கு ஒரு வாழ்வாதரத்தை ஏற்படுத்த முடியும். இதுகுறித்து தமிழக அரசிடமும், அந்த கமிட்டியிடமும் புத்தகங்கள் வாங்குவது தொடர்பாக சென்னை பத்திரிகையாளர் மன்றம் மூலம் வலியுறுத்துவோம்.

**சுரேஷ்வேதநாயகம்,**
சென்னை பத்திரிகையாளர் மன்ற தலைவர்




நடுநிலையாக ஒரு செய்தியை பொதுமக்களுக்கு வழங்குவது என்பது ஒரு சவாலான விஷயம். நடுநிலையான செய்திகளை வழங்கும்போது பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அனைத்தையும் கடந்து சாமானியர்களின் தக்கானாக இந்த தக்கார் வெற்றி பெற வாழ்த்துகள்

**எஸ்.பாண்டியம்மாள்,** நியூஸ் தமிழ்
தொலைக்காட்சி பணி ஒதுக்கீடு துறை தலைவர்



தக்கார் குரல் இதழ் வெளியீட்டு விழாவில் மகத்தான மனிதநேயருக்கான விருது, மறைந்த முன்னாள் தமிழ்நாடு மின்வாரியத்துறை ஊழியர் முரளி அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆதரவற்ற குழந்தைகளுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த இவரின் சார்பாக இவரது குடும்பத்தினர் இவ்விருதை பெற்று கொண்டனர்.

THAKKAAR KURAL, English & Tamil Monthly, PRGI Registration No: TNBIL/25/A2396




Published by S Esuf Basha, Printed Ali Mohamed Sayeed, Published at No.4, Pandiyan Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041, Printed at J.M.Process No.29, V.N.Dass Road , Border Thottam, Mount Road, Chennai-600002, Editor. S.Esuf Basha